உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாவடுதுறை ஆதீன வரலாறு.


மெய்கண்டான் யாண்டு — 727.

விகிருதி — புரட்டாசி.

1950.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருவாவடுதுறை ஆதீன வரலாறு.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி

ஷை ஆதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
தொகுத்து எழுதப்பெற்றது

மெய்கண்டான் யாண்டு – 727
விகிருதி – புரட்டாசி
1950.

கும்பகோணம்

ஸ்ரீ வெங்கடேச்வர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# கும்பாபிஷேக வெளியீடு

## ஸ்ரீ. உருத்திரகோடி தேசிகர்
## குருமூர்த்தம்

**4—10—'50.**

மதுரை.



GOVERNMENT O... ...SCRIPTS LIBRARY
15 OCT 1957
MADRAS

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

" கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

திருக்கயிலாய பரம்பரைத் 'திருவாவடுதுறை யாதீன வரலாறு' இப்பொழுது இவ்வாதீனத்திலே ஞான பீடத்து இருபதாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து சிவஞானச் செங்கோல் செலுத்தியருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி தொகுத்து எழுதி வெளியிடப்பெறுகிறது.

இதனைத் தொகுத்து வெளியிடுவதற்குப் பெரும்பாலும் இவ்வாதீனத்திலுள்ள பலவகைக் குறிப்புக்களும், இவ்வாதீனத்துக் கல்வி பயின்றவரும், வித்துவானும், சீடரும் ஆகிய இராமசாமிப் பிள்ளை என்று வழங்கும் ஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள "சிவஞான யோகிகள் வரலாறும்"

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதி வெளியிட்டுள்ள மகாவித்துவான், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் 1–2, பாகங்களும், ஐயரவர்கள் சரிதமும், மற்றும் பல்வேறு நூல்களில் உள்ள குறிப்புக்களும் மிகப் பயன்பட்டன. ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் எழுதியுள்ள இலக்கணக்கொத்து–ஸ்ரீ சாமிநாத தேசிகர் வரலாறும் இதற்குத் துணை செய்தது. வித்துவான். இலக்கண விளக்க பரம்பரை-சோமசுந்தர தேசிகர் அவர்கள் ஆராய்ந்தெழுதிய பதினேழாம் நூற்றாண்டுப் புலவர் வரலாறு கால ஆராய்ச்சிக்கு இன்றியமையாததாயிருந்தது.

இனி, என் தமிழாசிரியர்களுள் ஒருவரும், இவ்வாதீன வித்துவானும், சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் காலேஜ் பிரின்ஸ்பாலாயிருந்து பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராக இருந்தவர்களும் ஆகிய ஸ்ரீ சு. பொன்னோதுவாமூர்த்திகளிடத்தில் தெரிந்துகொண்ட செய்திகளும், அடியேனுக்கு முன்பு இவ்வாதீன வித்துவானாகச் சிறந்திருந்த பல்கலைப்புலவர் ஸ்ரீ சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள்பால் தெரிந்துகொண்ட செய்திகளும், பிறவும் இவ்வரலாற்றிலே தொகுக்கப் பெற்றுள்ளன. ஸ்ரீமத் ஐயரவர்கள் திருக்குமாரர் ஸ்ரீமத் - கல்யாணசுந்தரம் ஐயரவர்களிடம் கேட்டறிந்தனவும் இதன்பால் உள.

அங்கங்கே வரலாற்றிலே தொகுக்கவேண்டிய பலவகையான குறிப்புக்களையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அடிக்கடி கட்டளையிட்டருளினார்கள். பின்பு விரிவான வரலாறென்று வெளியிடவேண்டும் என்னும் திருவுளக்குறிப்பு

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு இருத்தலின் இவ் வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுக்கலானேன்.

முற்றுறிந்த பெரியோர்களது குறிப்புக்களின்றேல் அடியேனால் இவ்வளவில் எழுத இயலாது. அப்பெரியார் கட்கெல்லாம் அடியேனது பெருவணக்கம் உரியதாகுக. எஞ்சி நிற்கும் பலவகையான குறிப்புக்களைக்கொண்டு 'விரிவான வரலாறு' எழுத ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளின் திருவருள் முன்னின்று பாதுகாப்பதாகுக.

இனி, இப்பொழுது இவ்வாதீனத்திலே ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹா சந்நிதானமாக வெழுந்தருளியிருந்து குருக்ஷேத்திர பரி பாலனம், சிவக்ஷேத்திர பரிபாலனம், செந்தமிழ்ப் பரிபாலனம் சித்தாந்த சைவ சமய பரிபாலனம் முதலிய பலவற்றையும் இவ்வாதீன சம்பிரதாயங்களுக்கு விரோதமின்றிச் செய்துவருவ தோடு உலகோபகாரமான பல தர்மங்களையும் மக்களுக்கு இன்றியமையாமை யறிந்து செய்வித்து மக்கள் மனத்தெழும் பெருமகிழ்ச்சியை யறிந்து திருவுள மகிழும் பெருங் கொடை வள்ளலாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இதனைத் தொகுத்து என் சிற்றறிவுக்கு எட்டிய அளவில் எழுதி வெளிப்படுத்தி யுள்ளேன். குற்றம் பொறுத்தருள வேண்டுகிறேன்.

திருவாவடுதுறை,
3—10—50.

கு. சு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.

திருச்சிற்றம்பலம்.

" வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே "

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கயிலாய பரம்பரைத்

# திருவாவடுதுறை ஆதீன வரலாறு.

திருவாவடுதுறையென்பது சோழவள நாட்டிலே காவிரியாற்றின் தென்பால் தேவாரம் பெற்ற சிவதலங்களுள் ஒன்று. அது கும்பகோணத்திலிருந்து மாயூரம் செல்லும் வழியில் 12 கல் தொலைவில் உள்ளது; நாரசிங்கன்பேட்டைப் புகைவண்டி நிலயத்திலிருந்து கிழக்கே அரை நாழிகை வழியிலே சென்று இத்தலத்தைத் தரிசிக்கலாம்.

சிவபெருமானுடைய கட்டளையால் பசுவடிவம் பெற்ற உமாதேவியார் இத்தலத்துக்கு வந்து சிவபெருமானைப் பூசித்துப் பசுவடிவம் நீங்கப்பெற்ருர். திருமூல நாயனுர் மூவாயிரம் ஆண்டுகள் இத்தலத்திலே சிவயோகமிருந்து திருமந்திர மாலையை அருளிச்செய்தார். திருமாளிகைத்தேவர் போகநாத சித்தருடைய திருவடித் தொண்டு செய்து அருள்பெற்றுச் சைவ ஸ்தாபனம் செய்தருளினுர்; பற்பல அற்புதங்களையும் செய்தார். திருவிசைப்பாப் பாடிய நாயன்மார்கள் ஒன்பதின்மருள் முதலாமவர் திருமாளிகைத் தேவரே. நவகோடி சித்தர்கள் இங்கே வசித்துத் தவங்கிடந்த காரணத்தால் 'நவகோடி சித்தபுரம்' என்னும் பெயர் பெற்று விளங்குவது. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள், தமது

**இத்தல அற்புதங்கள்**

தந்தையார் யாகம் செய்யும் பொருட்டுச் சிவபெருமானைப் பாடி ஆயிரம் பொன் பெற்றருளியதும் இத்தலத்திலே தான். தமது கட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரச மரங்களாகத் தோன்றி விளங்கச் சிவபெருமான் அவற்றின் நிழலில் எழுந்தருளி யிருந்தனர். மகப் பேறு கருதி வந்து வழிபட்ட முசுகுந்த சக்கரவர்த்திக்கு இத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவுங் காட்டிப் புத்திரப்பேறும் அளித்துப் புத்திரத் தியாகர் என்னும் திருநாமமும் பெற்று இறைவர் விளங்குவது. தம்மைப் போற்றிய தரும தேவதையை இடப வாகனமாகக் கொண்டதன்றித் திருமுன்பு அரச விருட்சத்தின் நிழலில் கோயில் கொண்டிருக்கும்படிக்கும் வரமளித்தது. தேவர்களும் முனிவர்களும் செய்த வேண்டுகோளுக்கிரங்கிப் போதியம்பலத்தில் சிவபிரான் மஹா தாண்டவம் புரிந்தருளியது. சில முனிவர்களுக்குச் சிவ ஞானோபதேசம் செய்தருளியும், சில அந்தணர்களுக்கு வேதத்தை யோதியருளியும், போகநாத சித்தர்—நவகோடி சித்தர் முதலிய சித்தர்களுக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் அட்டமா சித்திகளையும் பிறவற்றையும் அருளியும் சிவபெருமான் இத்தலத்திலே எல்லையில்லா அற்புதங்களைச் செய்தருளினர். சித்தர்கள் பலர் எப்பொழுதும் வாசம் செய்கின்றனர் என்ற ஐதிகமும் உண்டு.

**நவகோடி சித்தர்** நவகோடி சித்தராவார் :— வீதிஹவ்வியர், வீதிஹோத்தரர், ஷிராயசர், சாகடாயனர், த்ரசதசியர், பௌருகுச்சர், சாலங்காயனர், இத்வரர், சாகல்யர் முதலியோர் என்ப. இத்தலத்திலே இச்சித்தாந்த சைவ ஆதீனத்தை ஸ்தாபித்த பேரருட்குரவர் ஸ்ரீ நமச்சிவாயதேசிக மூர்த்திகளே.

திருக்கயிலாய மலையிலே, அருள்வடிவாகிய கல்லால மர நிழலிலே, தட்சிணாமூர்த்தியாய் எழுந்தருளி யுள்ள ஸ்ரீகண்ட பரமசிவனிடத்திலே, சிவாகமங்களை எல்லாம் கேட்டருளிய திருநந்திதேவர் அவரை வணங்கி நின்று சுவாமீ! தேவரீர் அருளிய சிவாகமங்களில் நித்திய பதார்த்தங்கள் ஏழென்றும், ஆறென்றும், ஐந்தென்றும், மூன்றென்றும் பலவாகக் கூறப்பட்டுள்ளனவே: இவற்றின் பொருளொருமையை அடியேனுக்கு உணர்த்தியருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். ஸ்ரீகண்ட முதல்வர் அவர் வேண்டுகோட்கிரங்கி எளிவந்து "நன்றே வினயினாய், எல்லா ஆகமப் பொருள்களையும் மாறுகோள் இன்றி நன்கு விளக்குவது ஸ்ரீ ரௌரவாகமத்தில் 'சிவஞான போதம்' என்பதோர் படலம். அதனை உனக்கு இப்போது நன்கு விளக்குகின்றோம்" என்றுரைத்து அதனை நன்கு உபதேசித்தருளினார். அது கேட்ட துணையானே 'நந்திதேவர்,' எல்லா ஐயங்களும் நீங்கிப் பொருளொருமை தெளிந்து போற்றுவாராயினர். சீகண்ட முதல்வர்பால் தாம் பெற்ற இச்சிவஞானத்தைத் தம் மாணவர்களுட் சிறந்த 'சனற்குமார' முனிவருக்கு அருளிச்செய்தார். அவர் அதனைத் தமது மாணவருட் சிறந்த 'சத்தியஞான தரிசினி' களுக்கு அருளினார். அவர் அதனைத் தமது மாணவர்களுட் சிறந்த 'பரஞ்சோதி மாமுனிவ'ருக்கு அருளிச் செய்தார். திருக்கயிலாயத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி இது.

**திருக்கயிலாய பரம்பரையும் அகச்சந்தானமும்**

திருநந்தி தேவர் முதலிய நால்வரும் இப் பரம்பரையிலே 'தேவசந்தானத்தார்' என்றும், அகச்சந்தானத்தார் என்றும் வழங்கப்படுவர்.

### அகச்சந்தான குரவர்

திருநந்திதேவர்
|
சனற்குமார முனிவர்
|
சத்தியஞான தரிசினிகள்
|
பரஞ்சோதி முனிவர்.

### புறச்சந்தான குரவர்

நால்வருள் ஸ்ரீ மெய்கண்ட தேவர்

இனி, நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்திலே பரம்பரைச் சைவ வேளாளர் மரபிலே அச்சுத களப்பாளர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ் செல்வர். அரச குடும்பத்தினர் போன்ற நன் மதிப்புடன் விளங்கினர். அவருக்கு நெடுநாள் வரை புத்திரப் பேறில்லை. வருந்தினார். தமது குலகுருவாகிய 'சகலாகம பண்டித'ரிடத்தே சென்று தம் கவலையைத் தெரிவித்தார். திருத்துறையூரிலே எழுந்தருளியுள்ள சகலாகம பண்டிதர் தமது சீடருடைய குறையைத் தீர்க்கத் திருவுளங் கொண்டார். தமிழ் வேதமாகிய தேவாரத் திருமுறையை அர்ச்சித்துக் கயிறு சாத்துவித்தனர். அப்போது திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத்திலே திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலுள்ள—

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே."

(பி–ம்) வாயினவெ லாம்பெறுவர்.

என்னுந் திருப்பாட்டு உதயமாயிற்று. அச்சுத களப்பாளர் அத்திருப்பாட்டிற்கூறப்பட்டவாறு தமது மனைவியாரோடு திருவெண்காட்டினை அடைந்தார். முக்குள தீர்த்தத்திலே முறைப்படி நீராடினார். ஸ்ரீ சுவேதவனப் பெருமானையும் ஸ்ரீ பிரம வித்தியா நாயகியையும் நியமமாக வழிபட்டு வருவாராயினர். அந்நாளில் தமது மனைவியார் கருக் கொண்டார். அச்சுத களப்பாளர் சிவாகம விதிப்படி பத்துமாதங்களிலும் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தார். ஒரு நல்ல நாளில் சுப முகூர்த்தத்திலே அவருக்கு ஒரு சற்புத்திரர் திருவவதாரம் செய்தார். களப்பாளர் அகமிகமகிழ்ந்தார். ஸ்ரீ சுவேதவனப் பெருமான் திருவருளால் தோன்றிய தமது திருக்குமாரருக்குச் 'சுவேதவனப் பெருமாள்' எனப் பிள்ளைத் திருநாமம் சாத்தித்தமது இருப்பிடமாகிய திருப்பெண்ணாகடத்துக்கு வந்து சேர்ந்தார்.

அக்காலத்திலே திருவெண்ணெய் நல்லூரிலே இருந்த காங்கேய பூபதியென்பவர் தமது சகோதரியின் புதல்வரைக் காணத் திருப்பெண்ணாகடத்துக்கு வந்தார். அக்குழந்தையைத் தம் வீட்டுக்குக் கொண்டு சென்று வளர்த்து வரலாயினர். சுவேதவனப்பெருமாளும் தம் அம்மான் வீட்டிலே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். இஃது இவ்வாறாக, முன்பு நந்தி பரம்பரையிலே சிவஞானபோத உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் மகத்துவமிக்க அகத்திய முனிவரைக் காண வேணவாவுடன் பொதியிலுக்குச் சென்றார். வழியிலே திருவெண்ணெய் நல்லூரிலே இரண்டு, வயதுக் குழந்தையாய்த் திருவீதியிலே விளையாட்டயரும் நமது 'சுவேதவனப்பெருமாளைக் கண்டார். அந்தச் சிறு பிராயத்திலே மெய்யுணர்வின் முற்றுப் பேறுடைய சாமுசித்தராய் விளங்கும் சுவேதவனப்

பெருமாளது பக்குவந்தெரிந்து தீக்ஷைசெய்து தமது ஆசிரியர் திருப்பெயருக்கேற்ப 'மெய்கண்டான்' எனத் திருநாமம் சாத்தினர். தாம் பரம்பரையிற் கேட்ட சிவஞான போதத்தை அவருக்கு உபதேசித்தார். "இத் தமிழ் நாட்டார் உய்யத் திருவுளங்கொண்டு, தமிழிலே இதற்குப் பொழிப்புரைக்க" என்று அருளிச்சென்றனர். ஸ்ரீ மெய்கண்டதேவர் தாம் கேட்ட அச்சிவஞானபோத நூற்பொருள்களைச் சிந்தித்துத் தெளிந்தார். சிவஞான போத சூத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்து வார்த்திகப்பொழிப்பும் உரைத்தருளி வீற்றிருந்தார்.

**சகலாகம பண்டிதர் என்னும் ஸ்ரீ அருணந்திதேவர்**

திருத்துறையூரிலே எழுந்தருளியுள்ள சகலாகம பண்டிதர் இது தெரிந்து திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து ஸ்ரீ மெய்கண்டதேவரை வணங்கித் தம்மை ஆட்கொண்டருளுமாறு பிரார்த்தித்தார். அவரது பக்குவ நிலையைக் கண்டு ஸ்ரீ மெய்கண்ட தேவர் அவருக்குத் தீக்ஷை செய்து தாம் அருளிச்செய்த சிவஞான போதத்தை உபதேசித்து 'இச் சிவஞான நூற் பொருளைப் பிற் காலத்தார் இனிது உணரும் பொருட்டு விரித்தல் யாப்பான் வழி நூல் செய்க' எனக் கட்டளையிட்டருளி 'அருணந்தி' எனத் தீட்சாநாமமும் நல்கினர். தங் குரவரிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு சிவஞான போதத்தின் வழிநூலாகச் சிவஞான சித்தியாரை யருளிச்செய்தார் என்பது அவரருளிய,

"...............முன்னு ளிறைவனருணந்திதனக் கியம்ப நந்தி, கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக் குவலயத்தி னவ்வழியெங் குருநாதன் கொண்டு, தீதகல வெமக்களித்த ஞான நூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞான

சித்தி யென்றே." என்னும் பரபக்கத் திருவிருத்தந் தானும்;

"என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத்
 தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை
 தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ்
 மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத்
 தெரிக்க லுற்றாம்"

என்னும் சுபக்கத்திருவிருத்தத்தானும் தெளிவாக அறியக் கிடக்கின்றமை காண்க. இவ்வாசிரிய மூர்த்திகள் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் சிவஞான சித்தியாரும், இருபா இருபது என்னும் மற்றொரு நூலும் அருளிச் செய்தார். பின்பு,

**ஸ்ரீ மறைஞான சம்பந்தர்**

மருதூர்ப் பதியிலே திருவவதாரம் செய்து திருப் பெண்ணாகடத்திலே எழுந்தருளியுள்ள பராசர முனி கோத்திரோற்பவ ராகிய ஸ்ரீ மறைஞான சம்பந்தர் என்பவர் ஸ்ரீ அருணந்தி தேவ நாயனாரது பெருமையைக் கேள்விப்பட்டார். திருத்துறையூருக்குச் சென்றார். அருணந்தி தேவர் பால் தீக்ஷை பெற்றுச் சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபது என்னும் சாஸ்திரோபதேசம் கேட்டருளிச் சிவஞானங் கைவரப் பெற்றார், சிதம்பரத்துக்கு மேல்பாலுள்ள திருக்களாஞ் சேரியில் சிங்காரத் தோப்பிலே ஸ்ரீ பிரமபுரீசர் சந்நிதியிலே சிவானந்த நிட்டையிலிருந்தார். இது நிற்க.

சிதம்பரத்திலே உள்ள தில்லைவாழந்தணர் குலத்திலே தோன்றிய ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமி கள் ஸ்ரீ மறைஞான சம்பந்த சிவாசாரியருடைய மகிமை களைத் தெரிந்து அவரிடத்தணுகிச் சிவதீட்சை பெற்றார். சிவஞான போத முதலிய சாஸ்திரோபதேசமும் செய்யப் பெற்றனர். சைவசித்தாந்த நூற் பொருள்களை யாவரும் எளிதினுணரும் பொருட்டுக் கருணை கூர்ந்து ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் சிவஞான போதத்திற்குச் சார்பு நூலாகச் 'சிவப்பிரகாசம்' என்னும் நூலையும், மற்றும் திருவருட் பயன், நெஞ்சுவிடு தூது, போற்றிப் பஃறொடை, உண்மை நெறி விளக்கம், கொடிக்கவி, வினா வெண்பா, சங்கற்ப நிராகரணம் என்னும் ஏழு நூல்களையும் தமிழிலே இயற்றியருளினார் கள். கோயிற் புராணம், சேக்கிழார் நாயனார் புராணம் முதலியவற்றையும் தமிழில் அருளிச் செய்தார்கள். வடமொழியிலே பௌஷ்கராகமத்திற்கு வியாக்கியான மும் அருளினார்கள். தாம் சிவஞானோபதேசம் பெற்ற கால முதல் கொற்றவன் குடியிலே எழுந்தருளியிருந்து கொண்டு சிவானந்த வாழ்விலே திளைத்து வந்தனர். பெற்றான் சாம்பானுக்குத் திருச்சிற்றம்பல முடையார் கைத்தீட்டுப்படி முத்தி கொடுத்தருளினர். பற்பல அற்புதங்களும் நிகழ்த்தினர் என்ப.

**ஸ்ரீ உமாபதி சிவம்**

இனி, ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தமது ஆசிரியர் பரம்பரையைத் தெளிவாகத் தாமருளிய சிவப்பிரகாச நூலில் அருளிச்செய்திருக்கின்றனர். அத் திருவிருத்தம் வருமாறு :—

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெ

மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்

தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே."

என்பது.

இங்கு ஓர் செல்வர் என்றது சனற்குமார முனிவரை.

**புறச்சந்தான குரவர்**

ஸ்ரீ மெய்கண்ட தேவர்
|
ஸ்ரீ அருணந்தி சிவம்
|
ஸ்ரீ மறைஞான சம்பந்தர்
|
ஸ்ரீ உமாபதி சிவம்

ஸ்ரீ உமாபதி சிவம் கொற்றவன் குடியிலெழுந் தருளியிருந்து கொண்டு சிவஞான நிட்டையிலிடையறாது வீற்றிருந்த காலத்திலே 'அருணமச்சிவாயர்' என்பவர் உமாபதி சிவத்தின் மகிமைகளைத் தெரிந்து அவரிடத்துச் சென்று தீட்சை பெற்றுச் சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய நூல்களையுங்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து அங்கேயே சிவநிட்டையிலமர்ந் திருந்தார்.

இனி, வேதாரணியத்திலும் திருவாவடுதுறையி லுமாக எழுந்தருளியுள்ள சித்த மூர்த்திகளாகிய சிவப்பிரகாசர் மேற்கூறிய ஸ்ரீ அருணமச்சிவாய தேசிகர் பால் தீக்ஷைபெற்றுச் சிவஞான போத முதலான ஞான

நூல்களையும் உபதேசிக்கப் பெற்றுச் சிவஞானங் கை வரப்பெற்று விளங்கியிருந்தார்.

இந்தச் சித்தர் சிவப்பிரகாசர் சிதம்பரத்தினின்று எழுந்தருளித் திருவாவடுதுறைக்கு வரும் வழியிலே மூவலூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அவதாரஞ் செய்தருளிய "வைத்தியநாதர்" என்பவர் சிவபுண்ணிய முதிர்ச்சியாலே அச்சித்த மூர்த்திகளை யடைந்து தமக்குச் சிவஞானோபதேசம் செய்தருள வேண்டுமென விண்ணப்பித்தார். சித்த மூர்த்திகளும் அவருடைய தீவிரதர சத்திநி பாதத்தையும் திருவருளை

1. ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்

யுஞ் சிந்தித்து நோக்கினர். திருக் கடைக்கண் சாத்தி அவருக்குத் தீட்சை செய்து தமது ஆசிரியர் திருநாமத்துக் கேற்ப 'நமசிவாயன்' எனத் தீட்சா நாமம் சாத்தினர். தமது பரம்பரையிலே உபதேசம் செய்யப் பெற்றுவரும் சிவஞான போத முதலிய ஞான நூல்களை அவருக்கு உபதேசித்தனர். இந்த நமச்சிவாய மூர்த்திகள் தமது ஆசாரியராகிய ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாச தேசிகர் திருவாவடுதுறையிலே வகுத்த அறையிலே அவ ராணைப்படி எழுந்தருளியிருந்து சிவஞான போத உபதேச சித்தாந்த சைவ பரம்பரை நிலவுலகத்திலே நின்று நிலவு மாறு ஆதீனத்தை நிலைநிறுத்தினர். இதனை,

"திருந்துவட கயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன்
வழங்கருட்சந் ததியினமச் சிவாயதே சிகனு
மிருங்குரவ னளித்தசிவப் பிரகாச தேச
னிலங்குமறை வனத்தருகோர் வனக்குகையி
[லுறைநாட்

பொருந்தியவன் றிருவடிக்கீழ் அவனருளே வலிஞற்
போந்தருளா வடுதுறைவாழ் நமச்சிவா
[யனைப்புகழ்வாம்."

என்னும் ஸ்ரீ தட்சிணுமூர்த்தி தேசிகர் திருவாக்கா னறியப்படும். மூவலூரிலே நமது பரமாசாரியர் அவதாரம் செய்தருளிய திருமாளிகை இவ்வாதீனத்துக்குச் சொந்தமாகவுள்ளது.

இந்த ஆதீனம் ஸ்ரீ நமசிவாய பரமாசாரிய மூர்த்திகளாலே நிலை நாட்டப் பெற்று விளங்குவதால்

**உபதேச பரம்பரை**

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் ஆதீனம் என்னும் பெயரால் வழங்கப்பெறும். ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனுர் முதல் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் இறுதியாகவுள்ள இந்த ஆசாரிய பரம்பரை பூத பரம்பரை எனப்படும். முற்கூறிய தேவ பரம்பரையும், இந்தப் பூத பரம்பரையும் உபதேச பரம்பரை என்று சிறப்பாகக் கொள்ளப்படும். மேல் வருவன அபிஷேக பரம்பரை ஆம்.

தமிழ்நாடு உய்யும் பொருட்டுத் திருவவதாரம் செய்தருளிய ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனுரைப் பற்றிய ஒரு குறிப்பு, திருவண்ணுமலைக் கல் வெட்டால் தெரி

**கால நிர்ணயம்**

கிறது. அந்தக் காலம் கி. பி. 1232; மூன்ரும் இராசராசன் ஆட்சிக் காலத்து 15–வது ஆண்டு ஆம். மூன்ரும் இராசராசன் 1216—1253 எனவே, மெய்கண்டார் காலம் ஒருவாறு ஆராய்ச்சியாளர்களால் கி. பி. 1223 எனத் துணியப்பட்டு நடைமுறையிலிருந்து வருகிறது. அது பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதி. ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு நான்காம் தலைமுறையாகப் பின்பு ஞானுசிரியராக வந்த

ஸ்ரீ உமாபதி சிவம் தாமருளிய சங்கற்ப நிராகரணம் சகம்—1235 எனக் குறித்துள்ளார்கள். அது கி. பி. 1313 க்கு நேர் ஆம்.

இனி, ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகருடைய காலத்தை ஒருவாறு ஆராய்வோம். ஸ்ரீ உமாபதி சிவத்தின் மாணவர் ஸ்ரீ அருணமச்சிவாயர், அவர் மாணவர் சித்தர் சிவப்பிரகாசர், அவர் மாணவரே ஆதீன ஸ்தாபகராகிய ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரிய சுவாமிகள். எனவே, மூன்று அல்லது நான்காந் தலைமுறை என்று ஏற்படும். சராசரி தலைமுறை யொன்றுக்கு 30 ஆண்டுகள் வீதம் கணக்கிட்டால் 120 ஆண்டுகள் ஆகின்றன. அது கி. பி. 1433 ஆம்.

இனி, இதனை மற்றொரு வகையாகவும் கணக்கிட்டு ஆராய்வோம். ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் காலத்திலே சூரியனார் கோயிலிலே கந்த பரம்பரை வாமதேவ சந்தானத்திலே குருமூர்த்தமாக எழுந்தருளியுள்ள முதலாசிரியர் ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர் ஆவர். அவர் அடிக்கடி திருவாவடுதுறைக்கு எழுந்தருளி ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியருடன் அளவளாவியிருந்து செல்வதுண்டென்னும் வரலாறு உண்டு. ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியருடைய சீடர் ஸ்ரீ வீழிச்சிவாக்கிர யோகிகள். அவர் அதிவர்ணாசிரமி. அவரருளிய நூல்கள் பல. சைவ சந்நியாச பத்ததி என்பது அந் நூல்களுளொன்று. அந் நூலின் உபோத்காதத்திலே இவர் அந் நூலை "விசய நகரத்து அரசர் சதாசிவராயருடைய ஆட்சியில் காவிரியாற்றினாலே வளம் பொருந்திய சோணாட்டிலே தஞ்சாபுரியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த சின்ன செவ்வாச்சுத நாயக்கர் அவையிலே சாலிவாகன சகம் 1486-ல் அரங்கேற்றினார்" என 5, 6 வது சுலோகங்களிற் குறித்துள்ளார். இது கி. பி. 1564 ஆகும்.

விசயநகர அரசர் இருஷ்ணதேவ ராயர் காலம் கி. பி. 1509—1529 வரை, அவருக்குப் பின் அச்சுத ராயர் 1542 வரை; அவருக்குப் பின் சதாசிவ ராயர் காலம் 1570 வரை என வரலாறு கூறும். எனவே, வீழி - சிவாக்கிர யோகிகள் சுமார் தமது 60-வது பிராயத்திலே அந்நூலை அரங்கேற்றினார் எனக் கொண்டாலும் அவருக்கு முன்பு ஞானாசிரியராகவுள்ள ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர் வயது முதிர்ந்தவராகவே இருத்தல் வேண்டும். இரண்டு தலை முறைகளில் 40+40 ஆண்டுகள் கழித்தாலும் அது கி. பி. 1484 க்கு முற்பட்ட காலமாகக் கொள்ள இயலாது. இது கிடக்க,

இனி, இதனை இன்னொரு வகையாகவும் கணிக்கக் கடவோம். அது வருமாறு: ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் சீடருள் ஒருவர் குடந்தைச் சிவப் பிரகாச தேசிகர். அவர் தமது ஆசிரியர் கட்டளைப்படி, சிதம்பர ஆலயத்துக்கு வந்த பூசை முட்டுப் பாட்டைத் தவிர்க்க வேலூர் செல்ல நேர்ந்தார். அப்போது அங்கு விசயநகர அரசரது அமைச்சராகவும் பிரதிநிதியாகவுமிருந்து அரசாங்கத்தை நிர்வகித்து வந்தவர் இலிங்கம நாயக்கர். அவர் பழுத்த வீர சைவர். அவரை இலிங்கண்ணா எனவும் மக்கள் கூறுவர். அவரைக் கண்டு குரு கட்டளையை

**குடந்தைச் சிவப்பிரகாசர்**

நிறைவேற்றக் கருதித் தாமும் வீரசைவக் கோலங் கொண்டு காரியத்தை முற்றுவித்தார். பின்பு இலிங்கம நாயக்கர் விருப்பப்படி அவரால் திருவண்ணாமலையில் அமைத்த திருமடத்தில் தமது குரவர் ஆணைப்படி இருந்து வந்தார். இலிங்கம நாயக்கர் கி. பி. 1610 வரை வேலூரில் இருந்ததாகச் சரித்திர ஆசிரியர் கூறுவர். இலிங்கதுரையான இலிங்காரெட்டியார் கி.பி. 1610–1648 வரை தலைவராக இருந்து துறையூர் பாளையப்பட்டை

ஆண்டார் என வம்சாவளி கூறும். இலிங்க துரை சிவப் பிரகாசர் தங்குவதற்குத் துறையூரில் ஒருமடம் ஏற்படுத் தனர். சிவப்பிரகாசர் துறையூரிலும் திருவண்ணமலை யிலும் வசித்து வந்தார். தல யாத்திரையாகச் செல்லும் போது ஒருநாள் திருப்பட்டீச்சுரத்துக்கு அணிமையில் சிவலிங்க ஐக்கியமானர். அங்கே இவர் சமாதி இன்று முள்ளது. எனவே, குடந்தைச் சிவப்பிரகாசர் தமது சிறுவயதிலே அஃதாவது 15 வயதளவிலே ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளை யடுத்து 20 பிராயம் வரை அணுக்க ராய்ப் பின்பு 90 பிராயம் முதியவராயிருந்து பரிபூரணம் அடைந்திருப்பினும் 70 ஆண்டுகள் கழிக்க எவ்வாற்று னும் கி. பி. 1540 க்கு முன்பு இருத்தல் இயலாது எனக் கருத வேண்டியிருக்கிறது.

இனி, மற்றொரு வகையில் கணக்கிடுவோம். குடந்தைச் சிவப்பிரகாசர் வீரசைவராய பின்பு ஸ்ரீ மறை ஞான தேசிகருக்கு ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் தீட்சை செய்து சிவஞானோபதேசம் செய்தருளினர். ஸ்ரீ மறை ஞான தேசிகர் துறைசைப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர். சிவஞானோபதேசம் செய்த துணை யானே அவர் தைலதாரை போல இடையருதுருகிச் சிவஞான நிட்டையிலமர்ந்து செயலற்றிருந்தார். ஸ்ரீ மறைஞான தேசிகருடைய மாணவர் ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவர். அவர் திருமயிலாடுதுறை என்னும் மாயூரப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர். 678 செய் யுட்கள் உள்ள திருவீழிமிழலைப் புராணத்தை அவர் இயற்றியுள்ளார். இயற்றப்பட்ட காலம் சாலிவாகன சகம் 1573 கர—ஐப்பசி மாதம் எனப் பாயிரத்தில் காணப் படுகிறது. அது கி. பி. 1651 க்கு நேர் ஆம். மெய்ஞ் ஞான முனிவர் இப் புராணத்தை முதிர்ந்த பருவத்தில் பாடியிருப்பினும் முன்பு சொன்ன கால வரையறையை ஒருவாறு கிட்டலாம். ஸ்ரீ மறைஞான

2. ஸ்ரீ மறைஞான தேசிகர்

தேசிகர் திருவாவடுதுறையிலே ஓர் தை மாதத்துச் சுவாதி நக்ஷத்திரத்திலே சிவபரிபூரண முற்றார். ஸ்ரீ மறைஞான தேசிகருக்குப் பின் திருவிடைமருதூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே தோன்றித் தம்மை யடுத்துத் தீட்சை முதலியன பெற்றுத் திருத்தொண்டு செய்து வந்த தம்பிரான்களிலே ஒருவருக்கு நிர்வாண தீக்ஷை செய்து "அம்பலவாணர்" எனத் தீட்சா நாமமும் சாத்தி ஆசாரிய அபிடேகமும் செய்து சின்னப்பட்டத்திலே ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் அமர்த்தினர். மற்றொருவராகிய ஸ்ரீ தட்சிணா மூர்த்தி என்பவருக்கும் அவ்வாறே நிர்வாண தீட்சை செய்து ஸ்ரீ தட்சிணாமூர்த்தி என்ற அப்பெயரையே தீட்சா நாமமாகச் சாத்தி ஆசாரிய அபிஷேகமும் செய்தார். இவர்களுள் ஸ்ரீ தட்சிணா மூர்த்தி தேசிகர் மெய்கண்ட சாத்திரக் கருத்துக்களை யுள்ளடக்கிய தசகாரியம், உபதேசப்பஃறொடை என்னும் இருநூல்களையும் அருளிச் செய்து திருவாவடுதுறையிலே ஓர் மாசி மாதத்துச் சித்திரை நட்சத்திரத்திலே சிவ பரிபூரண முற்றனர்.

ஞானதேசிகராகிய பரமாசாரிய மூர்த்திகள் துவிதீய ஆசிரியராகிய அம்பலவாண தேசிகருடன் நெடுங்காலம் சித்தாந்த ஞானோபதேசம் செய்து வீற்றிருந்தருளினர். தமது ஆன்மார்த்த வைத்தியநாதத் தம்பிரானை அழகிய திருச்சிற்றம்பல முடையவர் அம்பலவாணரென்னும் உபய மூர்த்திகளோடும் எழுந்தருளப் பண்ணிப் பூசித்துக் கொண்டு தமது அருளுபதேச பரம்பரையைப் புரந்து வருமாறு, துவிதீய ஆசிரியராகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்குக் கட்டளையிட்டருளி ஒரு தை மாதத்து அசுவினி நட்சத்திரத்தில் திருவாவடுதுறையிலே சிவ சோதியில் இரண்டறக் கலந்தருளினர்.

### 3. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

மூன்ருவது பட்டத்திலெழுந்தருளிய ஸ்ரீ அம்பல வாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார்,

அவர் அருளிய நூல்கள்

சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃருெடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் செய்யுள் நூல் பத்தும்; சிவஞான போத சிந்தனை யென்னும் உரை நூல் ஒன்றும், பூப்பிள்ளை யட்டவணை முதலிய சிறுநூல்களும் பிறவும் அருளிச் செய்தனர்.

அம்பலவாண தேசிகர் தம்மை யடைந்த பக்குவர்களுக்கு அனுக்கிரகம் செய்து கொண்டும், சிவஞான போத முதலிய ஞான நூல்களை ஆராய்ந்து பொழுது கழிப்பியும் சிவானந்த பரவசராய் இருந்து வந்தார். இவ்வாருக, ஒருசமயம் ஒரு வைணவப் பிராமணர் அவர்

உலகுடைய நாயனுர், பெரிய பிள்ளை

தம்மைச் சரணமாக அடைந்து உபதேசம் பெற விரும்பினுர். கல்வியறி வொழுக்கங்களில் சிறந்த பரிபக்குவமிக்க அவருக்கு சைவ சந்நியாசம் கொடுத்து, நைட்டிக நிர்வாண தீக்ஷையும் செய்து, மெய்கண்ட சாஸ்திரங்களையும், தாமியற்றிய தசகாரிய முதலிய நூல்களையும் உபதேசித்தார். "உலகுடைய நாயனுர்" என்பது அவரது தீக்ஷா நாமம். அவர் தம்முடைய ஞானுசிரியர் மீது சைவ சித்தாந்த சாத்திரக் கருத்தை உள்ளடக்கிய தோத்திர ரூபமாக "மலமெனுந் தடத்திற் கரும சேதகத்தின்", என்றற் ருெடக்கத்துப் பத்துத் திரு விருத்தங்களைப் பாடினுர். அது "உலகுடைய நாயனுர் திரு விருத்தங்கள்" எனப் பெயர் பெறும். மற்றும், அம்பலவாண தேசிகரிடத்தே

சிவதீட்சை பெற்றுச் சைவ சித்தாந்த உபதேசங் கேட்டருளிய சிவபுரம் பெரியபிள்ளை என்பவர் தமது ஆசிரியர் மீது "அந்தமலத்தத்துவிதம்" என்றற் றொடக்கத்துப் பத்துத் திருவெண்பாக்களைப் பாடி யருளினர். அவை, "சிவபுரம்—பெரியபிள்ளை பாடல்கள்" எனப் பெயர் பெறும்.

பின்பு ஸ்ரீ அம்பலவாண தேசிகர் ஸ்ரீ உருத்திர கோடி தேசிகருக்கு ஆசாரியாபிஷேகம் செய்து சைவ சித்தாந்த சாத்திரங்களை உபதேசம் செய்தருளினர். ஸ்ரீ அம்பலவாண தேசிகர் திருவாவடுதுறையிலே ஒரு சித்திரை மாதத்து அவிட்ட நக்ஷத்திரத்திலே சிவபரிபூரண முற்றனர். ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர் பீடத்தி லெழுந்தருளிச் சித்தாந்த சைவ ஞானோபதேசம் செய்துகொண்டு சிவத்தியான பரரா யெழுந்தருளியிருந்தார். அவருடைய

## 4. ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்.

அடியார் கூட்டத்திலே சிறந்து விளங்கிய தம்பிரான் சுவாமிகளாகிய ஸ்ரீ ஈசானத் தம்பிரானது மகிமைகளையும், ஸ்ரீ மகா சந்நிதானத்தின் சிவானுபூதிச் செல்வ வாழ்க்கையையும் பெருமையையும் நன்கு தெரிந்த மதுரைச் செவ்வந்தியப்ப நாயக்கர் என்பவர் (1) பாவநாசம் (2) திருப்புடைமருதூர் (3) செவ்வல் (4) திருநெல்வேலி (5) முரப்பநாடு (6) வள்ளியூர் (7) கன்னியாகுமரி (8) சுசீந்திரம் என்னும் எட்டு ஊர்களிலும் மடாலயம் அமைத்து அவற்றிற்கு வேண்டிய கிராமங்களும் அளித்தார். அக்கால முதலாக ஆதீனத்துக்குப் பொருள் வருவாய் ஏற்படத் தொடங்கியது. இங்ஙனம் நாயக்கர் கிராம சாசனம் செய்து கொடுத்தது சாலிவாகன சகம் 1537, 1539, 1543 ஆம். கி—பி. 1605, 1607, 1611 என்பன அவற்றிற்கு நேரான காலம். ஸ்ரீ உருத்திர

கோடி தேசிகர் தம் அடியவர்களுட் சிறந்த வேலப்பத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து தமக்குத் துவிதீய ஆசிரியராக அமர்த்தினர்.

பின்பு ஸ்ரீ ஈசானத் தம்பிரானது வேண்டு கோளின்படி சிவதல யாத்திரை தொடங்கிச், சோழநாடு பாண்டி நாடுகளிலுள்ள சிவதலங்களை முறையாகத் தரிசித்து மதுரையம்பதி சென்று, அங்கே செவ்வந்தியப்ப நாயக்கரும் அவர் தம்பியாகிய முத்துவீரப்பநாயக்கரும் சிறப்புச் செய்து போற்றத் திருநெல்வேலி, திருக்குற்று லம், பாவநாசம், கன்னியாகுமரி முதலிய தல தரிசனம் செய்து 'சுசீந்திரத்தை' ஞானதேசிகர் அடைந்தார். தென்னட்டிலும் குரு பரம்பரை தழைத்தோங்கத் திருவுளங்கொண்டு அங்கே ஆதீன முதற் குரவராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் திருவுருப் பிரதிட்டை செய் தருளினர். துவிதீய ஆசிரியராகிய வேலப்ப தேசிகரைப் பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்யுமாறு சுசீந்திரத்திலே இருத்திவிட்டுத் தாம் திருவாவடுதுறைக்கு அடியார் புடைசூழ எழுந்தருளினர். வரும் வழியிலே மதுரைமா நகரிலே ஞானதேசிகராகிய ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர் தங்கி யிருக்குங் காலத்து ஓர் கார்த்திகை மாதத்து அநுஷ நக்ஷத்திரத்திலே சிவபரிபூரணமுற்றார். செவ்வந் தியப்ப நாயக்கர் மிகச் சிறப்புடன் பத்துநாட் குருபூசை யும் செய்வித்தார். மதுரை நாயக்கர் ஆட்சியில் முத்து வீரப்ப நாயக்கர் காலம்—1609—1623 வரை என்பர்.

பின்பு, ஸ்ரீ வேலப்ப தேசிகர் ஞானபீடத்தி லெழுந்தருளினர். பீடத்தி லெழுந்தருளியிருந்த ஞான தேசிகர் அடியவர்களுட் சிறந்த குமாரசாமித் தம்பிரா னுக்கு ஆசாரியாபிடேகம் செய்து தமக்குத் துவிதீய குரவராக நியமித்தருளினர். இவ்வாருக, ஸ்ரீ ஈசானத்

தம்பிரான் சுவாமிகள் திருநெல்வேலி ஈசான மடத்தில் வசிக்குங் காலத்து ஓர் பங்குனி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்திலே சிவபரிபூரண முற்றார். சுசீந்திரத்தி

**5. ஸ்ரீ வேலப்ப தேசிகர்**

லெழுந்தருளியிருந்து கொண்டு அங்குள்ள பக்குவர்களுக்கு ஸ்ரீ குமாரசாமி தேசிகர் தமது ஞான குரவராணைப்படி அனுக்கிரகம் செய்து வருவாராயினர். ஞானதேசிகராகிய ஸ்ரீ வேலப்ப தேசிகர் திருத்தல தரிசனம் செய்து கொண்டு திருப்பூவணத்தி லெழுந்தருளியிருக்கும் காலத்திலே ஓர் கார்த்திகை மாதத்திலே உத்தராட நட்சத்திரத்திலே சிவபரிபூரண மடைந்தார்.

இனி, மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய வினா வெண்பா வுரையிறுதியில் " இவ்வுரை சாலிவாகனசகம் 1600க்கு மேற் செல்லா நின்ற பிங்கள ஹூ வைகாசிமீ மெய்கண்ட சந்ததியில் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்தி மரபில் வேலப்பப் பண்டார மனுக்கிரகம் பெற்ற நமச்சிவாயத் தம்பிரான் செய்த தென வறிக " என்று வரையப் பெற்றுள்ள குறிப்பைக்கொண்டு ஆராய்ந்தால் அது கி—பி. 1678க்கு நேர் ஆம்.

இரண்டாங் குரவராகிய ஸ்ரீ மறைஞான தேசிகருடைய மாணவர் திருமயிலாடுதுறை — மெய்ஞ் ஞான முனிவர் திருவீழிமிழலைப் புராணம் இயற்றிய காலம் கி—பி. 1651. ஐந்தாங் குரவராகிய ஸ்ரீ வேலப்ப தேசிகர் மாணவர் நமச்சிவாயத் தம்பிரான் வினா வெண்பாவுக்கு உரை செய்த காலம் கி—பி, 1678. இதற்கிடையே உள்ள காலம் 27 ஆண்டுகள் ஆம்.

ஸ்ரீ வேலப்ப தேசிக மூர்த்திகளுக்குப் பின்பு ஸ்ரீ குமாரசாமி தேசிகர் ஞானபீடத் தெழுந்தருளி

யிருந்து கொண்டு பக்குவர்களுக்கு அனுக்கிரகம் செய்து வருங்காலத்திலே ஒரு நன்னாளிலே அடியவர்களுட் சிறந்த குமாரசாமித் தம்பிரானுக்கு ஆசாரிய அபிடேகம் செய்து துவிதீய குரவராக அமர்த்தினார். சிலகாலஞ் செல்ல ஞானாசிரியர் சிவதல யாத்திரை செய்துகொண்டு சுசீந்திரத்திற் கெழுந்தருளி அங்கே தங்கியிருக்கும்பொழுது ஓர் கார்த்திகை மாதத்து உத்தராட நட்சத்திரத்திலே சிவபரிபூரண மெய்தினர். பின்பு, பிற் குமாரதேசிகர், குருபூசையைப் பத்து நாட்களிலும் சிறப்புறச் செய்து ஞானாசிரியராகப் பீடத் தெழுந்தருளி யிருந்தார். அக் காலத்திலே அடியவர்களுட் சிறந்து விளங்கும் முத்தம்பலவாணத் தம்பிரானுக்கு ஆசாரிய அபிடேகம் செய்து துவிதீய குரவராக அமர்ந்திருக்கச் செய்தருளினார்.

## 6. ஸ்ரீ குமாரசாமி தேசிகர்

## 7. ஸ்ரீ பிற்குமார தேசிகர்

## 8. ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சோழவள நாட்டிலே திருவெண்காடு என்னும் சிவ தலத்திலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபிலே அவதரித்தவர்கள். இவருடைய தாய் தந்தையர் இருவரும் சிவநெறி தவறாதொழுகிய சீலர்கள். தாயார் பிறந்தகம் சமய குரவருள் முதல்வராகிய திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் செய்தருளிய சீகாழிப் பதி என்பர். தந்தையார் திருவெண்காட்டிலே தம் இல்வாழ்க்கையை நடத்தினர். ஆயினும், திருவாவடுதுறையிலே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ ஒப்பிலா முலையம்மை பங்கராகிய ஸ்ரீ மாசிலாமணி யீசரிடத்து ஈடுபாடுடையராக இருந்தார். திருவெண்காட்டிலே

முக்குள நீராடி முறைப்படி சுவேதவனேசுரரை வழிபாடாற்றி நல்ல புத்திரப் பேற்றை வேண்டினர். அடிக்கடி திருவாவடுதுறைக்குத் தம் மனைவியாருடன் வந்து கோமுத்தி தீர்த்தத்திலே விதிப்படி முழுகிப் பொன்னித் துறையிலும் ஆடி முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் புத்திரப் பேறருளிய ஸ்ரீ தியாகராசப் பெருமானையும், ஸ்ரீ ஒப்பிலா முலையம்மையாரையும், ஸ்ரீ மாசிலாமணி யீசரையும் வழிபாடாற்றி வந்தனர். திருமூல தேவரையும், திருமாளிகைத் தேவரையும், ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியரையும் தரிசித்து வணங்கிக் குறையிரந்து வருபவராயினர். சீகாழிப் பதிக்குஞ் சென்று பிரம தீர்த்தத்திலே நீராடி அம்மையப்பரைத் தரிசித்து வழிபாடாற்றி ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையாரை யொப்ப மகப் பேறொன்றுண்டாக வரங்கிடந்தனர். முன்னைத் தவப்பேற்றால் இம்மையிலே சிவபத்திச்செல்வம் நிறையப் பெற்ற அத் தாய் தந்தையரிடத்து நல்ல நாளுங் கோளும் சிறந்த நல்லோரையிலே இந்நூலாசிரியர் திருவருளுங் குருவருளும் வாய்ப்ப அவதரித்தனர். நன்மகவைப் பெற்ற அப்பெற்றோர் மாசிலாமணியீசர் திருவருளால் கிடைத்ததென மனங்கொண்டு அக்குழவிக்கு மாசிலாமணி எனப் பிள்ளைத் திருநாமமிட்டழைத்தனர்.

ஐந்தாம் வயதிலே பள்ளியில் வைத்து நல்லாசிரியரைக் கொண்டு கல்வி கற்பித்தனர். "விளையும் பயிர் முளையிலே" என்ற பழமொழிக் கிணங்க விரைந்து கல்வி கற்பாராயினர். மாசிலாமணியாரின் தமிழ் இலக்கண இலக்கிய நூற் பயிற்சியும், வடமொழிப் பயிற்சியும் வர வர மிக்கது. சமய நூற் பயிற்சியிலும் மனம் வலியுற்றது. தேவார திருவாசக முதலிய அருட்பாக்களில்

கல்வி

கற்றமை

உள்ளம் அழுந்தியது. கவி செய்யும் ஆற்றலும் மிகுதியாயது. ஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருப்பாட்டுக்களில் ஈடுபாடுடையராயினர். நம்பியாண்டார்நம்பிகளருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார் பிரபந்தங்களிலும் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரிய புராணத்திலும் கருத்தூற்ற மிக்கது. பன்னிரு திருமுறைகளிலும் நெஞ்சு பதிந்தது. இத்தகைய மாசிலாமணிப் பிள்ளையைத் தந்தையார் திருவாவடுதுறைக்கு அழைத்து வந்து அம்மையப்பரைத் தரிசித்து அப்பொழுது இவ்வாதீனத்திலே குரு மகா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஞான தேசிகரிடத்து அடைக்கலமாக ஒப்புவித்தார். சின்னப்பட்டத்திலே அமர்ந்தருளியவர்கள் ஸ்ரீ முத்தம்பலவாண தேசிகர் ஆவார். ஸ்ரீ மாசிலாமணியார் தமிழ் மொழியில் வல்லுநராயிருந்ததுடன் வடமொழியிலும் சிவாகமங்களிலும் நல்ல பயிற்சியுடையவராகச் சிறந்து விளங்கினர்.

ஞான தேசிகர் மாசிலாமணியாருடைய கல்விப் பெருமையையும், வயதின் சிறுமையையும், துறவிலே இருக்கும் மீதூர்ந்த ஆசையையும் நன்கு நோக்கி இம் மாசிலாமணி இவ்வாதீனத்திலே தெய்வவொளி வீசும் எனத் திருவுளங் கொண்டு இருவகைத் தீட்சையும் முறையே செய்து கல்லாடையுமருளி மாசிலாமணி என்னும் அப்பெயரையே தீக்ஷா நாமமாகச் சூட்டியருளினர். மாசிலாமணியாரும் ஆசாரியருடைய அணுக்கத்தொண்டராய்த் தொண்டாற்றி வழிபட்டு வர உலக நிலையிலே அவர் மனம் உலவாது ஒடுங்குவதாயிற்று. நெடுநேரம் அசைவற நிட்டை கூடியிருப்பர்.

துறவு

" தவமும் தவமுடையார்க்கே ஆம் " அன்றே! ஆளுடைய பிள்ளையாரின் அடிமலர்களில் அனவரதமும் அவர் சிந்தையிருந்து வந்தமையின் அப்பிள்ளையாருக்

குரியதாக ஒரு பிரபந்தம் செய்ய எண்ணினூர். “இளம் பருவ விளையாட்டை நோக்குழித் திருவுரு விடத்து ஆசை மிகுதி யுண்டாம்” என்ற படி மூன்றும் பிராயத்திலே அம்மையா ரருளிய சிவஞானங் குழைத்த பாலமுதை யுண்டு தேக்கிச் சிவஞானத் தமிழ் மணம் வீசும் பாலரு வாயர் விஷயமாகவுள்ள இப்பிள்ளைத் தமிழைப் பெரு மகிழ்வுடன் எம்மனோருக் கருளினர். சின்னப்பட்டத்தி லெழுந்தருளியுள்ள காலத்திலே இந்நூலை இவர்கள் அருளிச் செய்திருக்கலாமென்று தோற்றுகிறது.

**பிள்ளைத் தமிழ் அருளியது**

இனி, சின்னப் பட்டத்தி லெழுந்தருளி யுள்ள முத்தம்பலவாண தேசிகருடன் மற்றைத் தம்பிரான் சுவாமிகளும், அடியார் கூட்டங்களும் பின்வர ஞான தேசிகராகிய பிற் குமாரசாமி தேசிகர் சிவதல தரிசனம் செய்து கொண்டு பாண்டி நாட்டைச் சேர்ந்து திருக் குற்றாலத்திலேயுள்ள தமது திருமடத்தி லெழுந்தருளி யிருந்தனர். அப்பொழுது சின்னப் பட்டத்திலுள்ள முத்தம்பல வாண தேசிகர் ஒரு மாசி மாதத்துச் சித்திரை நாளிலே சிவபரிபூரண முற்றூர். பத்து நாட் குருபூசையும் முடிந்த பின்பு ஞானதேசிகர் அங்கிருந்து யாவரும் புடைசூழ்ந்து வர, சுசீந்திரத்துக்கு எழுந்தருளி யிருந்தனர். அக்காலத்திலே ஒரு நன்னுளிலே நமது மாசிலாமணியாருக்கு ஆசாரியாபிடேகஞ் செய்து சின்னப் பட்டத்திலமர்த்திச் சுசீந்திரத்திலேயே அவரை இருந்து வரப் பணித்துத் தாம் திருவாவடுதுறைக்கு எழுந் தருளினர் ஞான தேசிக சுவாமிகள்.

**சின்னப்பட்டம் பெற்றமை**

இஃதிவ்வாறுக, சின்னப் பட்டத்திலெழுந்தருளி யிருந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சுசீந்திரத்திலிருந்து தம்மையடுத்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்து

கொண்டும், சிவஞான நூல்களை உபதேசித்துக்கொண்டும் சிவானந்த நிட்டையில் இடையறாது இருந்து வந்தார். ஒருநாள் சாமிநாதர் என்னும் பெயருடைய இளம்பிராயப் பக்குவ முதியார் ஒருவர் நமது தேசிகரிடத்து வந்து தரிசித்து நின்றார். அவர் திருநெல்வேலிப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தினர். அவருடைய பத்தி வைராக்கியம் முதலிய வற்றைக் கண்ட தேசிகர் அவருக்கு இரு வகைத் தீட்சையுஞ் செய்து சைவ சந்நியாசமும் தந்தருளினர். ஞானநூல்களையும் உபதேசித்து வந்தார். தேசிகர்பால் ஞான நூல்களை ஐயந்திரிபற உணர்ந்த சாமிநாதர் தவத்தூயராயினர்; தவவொளி வீசத் தொடங்கியது. சாமிநாதருக்குத் தீட்சா குரு ஸ்ரீ மாசிலாமணி தேசிகரே.

**சாமிநாதர் அடுத்தமை**

ஸ்ரீ மாசிலாமணி தேசிகருக்கு அருட் பணிவிடை செய்து கொண்டு சாமிநாதர் அணுக்கத் தொண்டராய்ச் சுசீந்திரத்திலேயே இருந்து வந்தார். அக்காலத்திலே திருநெல்வேலியிலே மயிலேறும் பெருமாள் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரம்பரைச் சைவ வேளாளர். ஆதீனத்துச் சீடருள் சிறந்தவர். தாண்டவமூர்த்திப் பிள்ளையின் தவப் புதல்வர். கல்வி அறிவு ஒழுக்க முதலிய வற்றால் விழுப்ப மிக்கவர். செல்வம், அதிகாரம் முதலிய எல்லாவற்றானும் மேம்பட்டவர். குருலிங்க சங்கம பத்தியில் நிகரற்றவர். ஆதீன காரியங்களில் மிகக் கருத்தூன்றி வேலி போல விருந்து பாதுகாப்பவர். அடிக்கடி சுசீந்திரத்துக்கு வந்து நமது ஆசிரியரை வழிபாடு செய்து அளவளாவி யிருந்து செல்பவர். கல்லாட நூலுக்கு உரையிட்டவர்.

**மயிலேறும் பெருமாள் பிள்ளை**

நல்லிலக்கண மெல்லாம் ஒருங்கே சிறந்தமைந்து குருபணிவிடையில் கண்ணுங் கருத்துமாயிருந்து வரும் சாமிநாதத் தம்பிரானுடைய இளம்பிராயத்தையும் மூதறிவையுங் கண்டு மயிலேறும் பெருமாள் பிள்ளை பெரிதும் வியந்தார். இவருக்கன்றோ 'நாம் கற்ற கல்வி முழுவதையும் உளங்கொளக்கற்பிக்க வேண்டும்' என்னும் உறுதி கொண்டார். ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடத்து விடை பெற்றுச் சாமிநாதரையும் உடனழைத்துக் கொண்டு நெல்லையம்பதிக்குச் சென்றார். தொல்காப்பியங்களையும் தொல்காப்பியத்தையும் நன்கு கற்பித்தார். தமிழ்மொழியறிவுடன் வடமொழியறிவும் மேம்பட்டு விளங்க எண்ணினார். திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள செப்பறையிலே கனக சபாபதி சிவாசாரியார் என்பவர் அக்காலத்து மிகப் பிரசித்தரான வடமொழி வல்லுநராய் இருத்தலை யறிந்து அவரைக் கொண்டு வடமொழி வியாகரண முதலிய நூல்களைக் கற்பிப்பித்தார்.

**சாமிநாதர் புலமை** பன்னிரண்டாண்டுகள் சாமிநாதர் மயிலேறும் பெருமாள் பிள்ளையாகிய தமது இயற்றமிழாசிரியரை விட்டு நீங்காது உடனுறைந்து கற்று, உளங் கொளப் பயின்றனர். பின்பு தாம் சாமிநாதரை அழைத்துக்கொண்டு ஞானதேசிகரிடத்துச் சென்று தரிசித்து இவர் கல்வித் திறமையைப் பரீக்ஷை செய்து காட்டி மகிழ்வித்தார். இத்தகைய மகானை ஞானாசாரியராக எழுந்தருளியிருக்கக் கண்டு தரிசிக்க வேண்டும் என்ற வேணவாவையும் விண்ணப்பித்தனர். ஞானாசாரியரும் "அவ்வாறே செய்வோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

பின்பு கல்விப் பெருஞ் செல்வராகவுள்ள சாமிநாதத் தம்பிரானுக்கு நிர்வாண தீக்ஷை செய்து சிவஞான போத முதலிய சித்தாந்த நூல்களை யுபதேசித்தருளினர்.

அவற்றைச் சிந்தித்துத் தெளிந்து அதன் பயனுகவுள்ள

**ஞானநூற் பயிற்சியும் இலக்கணக் கொத்து இயற்றலும்**

ஞானுசாரியருடைய அருட்பணி விடையில் அகலாது அணுக்கத் தொண்டராயமர்ந்தார். தாம் கற்ற இலக்கண இலக்கிய நூல்களிலே இலைமறை காய் போல் மறைந்து கிடந்த இலக்கண விதிகளையெல்லாம் திரட்டி "இலக்கணக் கொத்து" எனப் பெயரிட்டு உரையும் வகுத்தனர். பின்பு, ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சாமிநாதத் தம்பிரானுடன் திருவாவடுதுறையை யடைந்து தமது ஞானுசாரியராகிய ஸ்ரீ பிற் குமாரசாமி தேசிகரைத் தரிசித்து அங்கிருந்தார்.

ஸ்ரீ ஞான குரவராகிய பிற் குமாரசாமி தேசிகர் சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டார்.

**எட்டாம் பட்டத்தில் எழுந்தருளல்**

சோழநாட்டுத் தலங்களைத் தரிசனம் செய்து பாண்டிய நாட்டை யடைந்து பல தலங்களையுந் தரிசித்துச் சுசீந்திரத்தை யடைந்து தமது திருமடத்திலெழுந்தருளி அங்கே வசித்துவந்தார். அக்காலத்திலே ஓர் ஆவணி மாதத்து உத்தரட்டாதி நாளிலே ஞான தேசிகர் சிவ பரிபூரண முற்றனர். பின்பு ஞான தேசிகர் ஆகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் பீடாதிபத்தியம் பெற்றுத் திருவாவடுதுறையி லெழுந்தருளி யிருந்தார்.

ஞான தேசிகராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் தம் அடியவர்களுட்சிறந்த சிவக்கொழுந்து தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் செய்து ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் என்னும் பெயருடன் சின்னப் பட்டத்தி லமர்த்தினுர். மயூரகிரிக் கோவை இயற்றிய சாந்துப் புலவரின் மூன்ரும் பாட்டனுர் சர்க்கரைப் புலவர் என்பவர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகருடைய மாணவரே.

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் திருவாவடுதுறையிலே மாகேசுர பூசையைச் சிறப்புற நடத்தி மடாலயத்தில் எழுந்தருளி யிருந்தார். அக்காலத்திலே ஒருநாள் பேயும் உறங்கும் நள்ளிரவிலே தஞ்சை மன்னர் பஞ்சம வேடம் பூண்டு சென்று, அம்மடாலயத்தின் புறத்தே தூரத்தே நின்று 'சாமி! அடியேனைப் பசி வருத்துகின்றதே' என்று பேரொலி யிட்டழைத்தார். அப்பொழுது ஒடுக்கத்திலே சிவத்தியான பரராக அறிதுயிலமர்ந்திருந்த நமது தேசிகர் ஓலமிட்டழைக்கும் குரலை யுணர்ந்து, மடைப்பள்ளியிற்புகுந்து, ஒரு பாத்திரத்திலே

**அரசர் சோதனையும் ஆசாரியர் இரக்கமும்**

அன்னமுங் கறியும் நிறைய எடுத்து வந்து அன்புடன் கொடுத்துப் 'பசிதீருக' என உபசார மொழி கூறிச் சென்றார். மறுநாட் காலையில் தவசிப்பிள்ளைகளை அழைத்து 'மடைப்பள்ளி திறந்து கிடந்தமையால் நாய் புகுந்து விட்டது. அதனால், மடைப்பள்ளி முற்றும் சுத்தி செய்து புண்ணியாக வாசனம் செய்வித்த பின்பு பூசைக்குப் பாகம் பண்ணுக' எனக் கட்டளையிட்டார். பின்பு தஞ்சையரசர் தருமபுர ஆதீன மடாலயத்துக்குச் சென்று அவ்வாறே பசியெனக் கூறி ஓலமிட்டார். அப்போது பண்டாரக் கட்டிலே சிவத்தியானத்துடன் அறிதுயிலமர்ந்திருந்த குருமூர்த்திகள் ஆசார சீலராய் இருந்தமையால் மடாலயத்திலே "நீசருக்குப் பிச்சை யிடமாட்டார்கள்" என்று அன்புடன் சொல்லிப் போக்கினர். இங்ஙனம் இரவிலே நடந்த செய்திகளை அரசர் தஞ்சையில் அரசிருக்கை மண்டபத்திலே இருந்து அனைவரும் அறியச் செய்தனர் என்ப.

பின்பு ஒரு புண்ணிய காலத்திலே ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சிவதல தரிசனம் செய்துகொண்டு காவேரி

சங்கம ஸ்நானத்துக்கு எழுந்தருளினுர். அப்போது தஞ்சையரசரும் நீராடி வந்து திருவெண்காட்டிலே பரிசனங்களுடன் தங்கியிருந்தார். ஞானதேசிகரும் நீராடித் திருத் தொண்டர்களும், தம்பிரான்களும் உடன் வரச் சென்று தமது திருமடத்திலே எழுந்தருளி யிருந்தார்.

**பிராமண போசனமும் உவர்நீர்க் கேணியும்**

தஞ்சை அரசர் ஒரு மண்டலம் வரை பிராமண போசனம் மிகச் சிறப்புடன் செய்வித்தனர். பிராமண போசனத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்த அரசர் எண்ணி உச்சிட்டத்தை அங்குள்ள ஓர் உவர்நீர்க் கேணியிலே போட்டு வரச் செய்து முடிவிலே தூர்வை யெடுக்கச் செய்தார். பின்பும் அக்கேணியில் உவர்நீரும் புழுக்களும் நீங்காமல் இருப்பதையறிந்து பெரிதும் கவன்றிருந்தார்.

இதனை யுணர்ந்த ஞானதேசிகர் அரசர் முகமாக ஒரு மண்டலம் வரை மாகேசுர பூசை நடத்துவித்தார். அம்மாகேசுரர் உச்சிட்டங்களைத் தமது

**உவர்நீர்க் கேணியும் மாகேசுர பூசையும்**

மடாலயத்திலே யுள்ள உவர் நீர்க் கேணி யொன்றில் போடச் செய்தார். இறுதியிலே அரசரையும், பிராமணுேத்தமர்களையும், பொது மக்களையும் உடன் வைத்துக் கொண்டு அவ்வுவர் நீர்க் கேணியைத் தூர்வை யெடுப்பித்தார். அப்போது உவர் நீர் முற்றும் நீங்கிக் கங்கை நீர் போலத் தூயதாய் விளங்கி ஊற்றுப் பெருகியது.

அரசர் அக்கிணற்றுக்குப் 'பரிகலக்கிணறு' என்னும் பெயர் இன்று முதல் என்றும் வழங்கிவருக எனக்கட்டளை யிட்டனர். மாகேசுர பூசைக்கு ஆகும்படி முற்றூட்டு நிலமு மளித்தனர். அவை இப்போதும் இவ்வாதீனத்துக் குரியனவாக உள்ளன. இக் குரு

மூர்த்திகள் அடிக்கடி திருவெண்காட்டில் உள்ள தமது திரு மடத்துக்கு எழுந்தருளிச் சிவானந்த நிட்டையிலிருப்பது வழக்கம். ஸ்ரீ மாசிலாமணி தேசிக மூர்த்திகள் தமக்குப் பின்பு ஒன்பதாவது பட்டத்திலே ஸ்ரீ இராமலிங்க தேசிகரை இருக்கச் செய்து தாம் திருவெண்காட்டிற்குச் சென்று நெடுநாள் அசைவற நிட்டையிலிருக்கும் காலத்து நரிகள் அவர் திருமேனியைக் கடித்து ஊறு செய்து உண்ணும்போதும் அவர் உணர்ந்திலர். அப்பொழுது அவ்வழியே சென்ற மக்கள் அது தெரிந்து நரிகளை விரட்டி நமது ஆசிரியரை நிட்டை கலைத்து எழுப்பினர் என்ப. அதனுல் 'நரிப்பண்டார சந்நிதிகள்' என அவரை மக்கள் அழைப்பாராயினுர்.

**பரிகலக் கிணறும் முற்றூட்டு நிலமும்**

**காலம்**

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் பட்டத்தி லெழுந்தருளியுள்ள காலம் கி. பி. 1625—1658 என்ப. அவர்கள் 33 ஆண்டுகள் பீடத்தி லெழுந்தருளியிருந்து ஞானுேபதேசம் செய்து வந்தார்கள். பின்பு, ஞான தேசிகர் திருவெண்காட்டிலே சிவ சமாதி கூடியிருந்து ஒரு சித்திரை மாதத்து உரோகிணி நாளில் சிவபரிபூரண மெய்தினர்.

சின்னப்பட்டம் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகருடைய மாணவர். சைவ தீட்சையும், சித்தாந்த சாஸ்திர உபதேசமும் அவரிடத்திலேதான் புலவர் பெற்றுர். திருச்செந்தூர்க் கோவையும், வேதாந்த சூடாமணிக்குச் சித்தாந்தப் பக்கவுரையும் இயற்றியவர். தொண்ணூறு பிராயம் வரை வாழ்ந்தவர். இவருக்கு ஆதி நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் என்பது சேதுபதிகளால் கொடுக்கப் பெற்ற சிறப்புப் பெயர். இவரை ஆதரித்த

**சர்க்கரைப் புலவர்**

நூலாசிரியர் வைத்தியநாத நாவலரைப் பார்த்து, அச் சொற்குள்ள இலக்கணங்கள் யாவும் எடுத்து விரித்துரைத்தனர். அதுவன்றியும், அச் சொல்லைப் பற்றியே அநேக விஞ்ஞையையும் நிகழ்த்தினர். அதைக் கேட்ட வைத்தியநாத நாவலர் மிக மகிழ்ந்து, 'தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்த சுவாமிநாத மூர்த்தியா! தேவர் இவ்விடத்தில் வந்திருப்பது எனக்குத் தெரியாது' என்று மிக்க விநயமொழி கூறினர். கூறியபின், 'இவ்வியல்புடைய மகாவித்துவான்களைப் போசனகால முதலிய எக்காலத்தினும் சமீபத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்' என்று ஞானதேசிகரிடத்தில் அறிவித்தனர்.

பின்பு வைத்தியநாத நாவலர் சிலநாள் இந் நூலாசிரியருடன் ஒருங்கு வதிந்து, தொல்காப்பிய முதலிய நூல்களைப் பாராட்டிக் கொண்டிருந்ததுமன்றி இவ்விலக்கணக் கொத்து நூலையும் கேட்டு, 'இவ்வரிய விதிகளை யெல்லாங் கண்டெடுத்து இங்ஙனந் திரட்டுவது யாவர்க்கும் அரிதரிது' என்று மிக வியப்புற்று மனமகிழ்ந்து தமதிடத்திற்குச் சென்றனர்" என்னும் வரலாறு உண்மையின் வைத்தியநாத நாவலரும், சுப்பிரமணிய தீட்சிதரும் பருவமுதிர்ந்த முதுபெரும் புலவர்களாய்த் திகழ்ந்திருந்தனர். அவ்விரு பெரும் புலவர்களும் வகுத்துக் காட்டிய வழியே, பின்பு ஈசான தேசிகருக்கு எடுத்துக்காட்டாக வுள்ளது. அக்காலத்து ஈசான தேசிகர் இருபத்தைந்து பிராய முடையவராக இருத்தல் வேண்டும்.

இனி, திருக்குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சிதர் தாம் செய்தருளிய பிரயோக விவேக நூலிலேயுள்ள 51-வது காரிகையில்.

" சீதள சந்த்ர முகராம பத்திர
தீக்கிதர்க்குப்
போதொடு சென்று புகல்வோ மவர்க்கும்
பொழுதில்லையேன்
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக
விவேகந்தன்னைப்
பேத மிலாத பதஞ்சலி பாற்சென்று
பேசுவமே." என்று கூறுகின்றார்.

பின்பு, அவர்பாற் சென்று அந்நூலை அவரைக் கேட்பித்தார் என்பது :—

" பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்றான்—நேர்கொண்டு
கேட்டான் இனிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்காலென் "

என்னும் வெண்பாவால் தெளியக் கிடக்கின்றது. வடமொழியிலே 'ஜானகீ பரியணம்' என்னும் நாடகநூல் செய்த இராமபத்திர தீட்சிதர் என்பவர் தஞ்சையில் சகஜி மன்னன் ஆட்சிக் காலத்தில் (1684—1712) விளங்கியவர். இவருக்குத் தஞ்சை சகஜி என்னும் ஷாஜி மன்னன் 1693-ல் நான்கு ஸ்தலங்கள் தான சாஸனம் செய்திருக்கிறார் எனத் தெரிகிறது. எனவே, இராமபத்திர தீட்சிதர் 1693 வரை உயிர் வாழ்ந்திருக்கிறார். சுப்பிரமணிய தீட்சிதர் சிறு பருவத்து முதிர்ந்த கல்வியறிவு வாய்ந்து விளங்கிய காலம் இராமபத்திர தீட்சிதருடைய முதிர்ந்த பிராயமாகலாம். வைத்தியநாத நாவலரும், சுப்பிரமணிய தீட்சிதரும் ஏறக்குறைய ஒத்த பிராயம் அல்லது சிறிது முற்பட்ட

பிற்பட்ட பிராய முடையவர்களாக இருத்தலும் கூடும். எங்ஙனமாயினும், இலக்கணக் கொத்து ஈசான தேசிகருக்கு இருபத்தைந்து பிராயமாகுங்காலம் வயித்தியநாத நாவலருக்கும் சுப்பிரமணிய தீட்சிதருக்கும் அறுபது எழுபது பிராயங்களாகலாம். அவ்விருவருக்கும் 25 அல்லது 30 வயதளவில் இராமபத்திர தீட்சிதர் அறுபது பிராய முடையவராக இருத்தல் இயலும். ஈசான தேசிகர் திருநெல்வேலியில் ஈசான மடத்தில் இருந்து கொண்டு இலக்கண இலக்கிய நூல்களும் சித்தாந்த சைவ நூல்களும் தம்மையடுத்த மாணவர்கட்குக் கற்பித்து வருங்காலத்தில்தான் சங்கர நமச்சிவாயர் என்பவர் அவரை யடுத்துக் கல்வி பயின்றார். திருச்செந்திற் கலம்பகமும் பாடியருளினார். அப்போது சின்னப் பட்டத்திலே எழுந்தருளியுள்ளவர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்: இது முன்னே கூறப்பட்டது.

ஸ்ரீ சாமிநாத தேசிகர் பின்பு திருவண்ணாமலையிலே ஈசான மடத்திலிருந்து தம்மை யடுத்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செயதுவந்ததுடன் சிவாநுபவச் செல்வ முதியவராய்ச் சிவானந்த நிட்டையிலே வீற்றிருப்பவராயினார். அப்போது அவர் தசகாரிய முதலிய நூல்களை இயற்றியருளினார்.

இவ்வாதீனத்து நான்காம் பட்டத்துக் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ உருத்திரகோடி தேசிகருக்குப் பின் கி. பி. 1621 முதல் 1625 வரையுள்ள காலத்திலே ஸ்ரீ வேலப்ப தேசிகர், அவருக்குப்பின் ஸ்ரீ குமரசாமி தேசிகர், அவருக்குப் பின் ஸ்ரீ பிற்குமார தேசிகர் என்னும் மூன்று குரு மகாசந்நிதானங்கள் பட்டத்தி லெழுந்தருளி யிருந்து சிவபரிபூரண மெய்தினர். அதற்குப் பின்பு எட்டாவதாக நமது ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் கி.பி. 1625ல் பட்டம்

பெற்றனர். ஸ்ரீ சங்கர நமச்சிவாயப் புலவர் கி. பி. 1770ல் நன்னூலுக்குப் புத்துரை வகுத்தார் என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ஸ்ரீ சாமிநாத தேசிகர் திருவண்ணாமலையிலே வசித்து வந்த காலத்து வயது தொண்ணூறென்பர். அவர் தள்ளாடி நடக்கும் நிலையி லிருந்தனர். சிவானுபூதிச் செல்வ மேலீட்டால் அவர் பட்டத்திலிருந்து ஞானச் செங்கோல் செலுத்தும் விருப்பமில்லாது அதனை வெறுத்திருந்தார். அதனாலே தாம் முன்பு சிறுவயதிலேயே சங்காபிஷேகமும், ஈசான தேசிகர் என்னும் தீட்சா நாமமும் பெற்று மூன்றாவது சின்னப்பட்டத்தில் எழுந்தருளி யிருந்தும் ஸ்ரீ மாசிலா மணி தேசிகருக்குப் பின் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் பட்டத்தி லெழுந்தருள நேர்ந்தார் என்க.

ஸ்ரீ சாமிநாத தேசிகர் திருவண்ணாமலையிலேயே ஓர் கார்த்திகை மாதத்து உத்தர நாளிலே சிவபரிபூரண மெய்தினர். இவர் செய்த நூல்கள் இலக்கணக் கொத்து, தச காரியம், சிவஞான போதம் சூர்ணிக் கொத்து, கடம்பநாத புராணம், திருச்செந்திற் கலம்பகம் என்பன.

இனி, படிக்காசுத் தம்பிரான் திருவாரூர் வயித்தியநாத நாவலருடைய மாணவர். அவர் காலத்தவரே நாவலருடைய புதல்வர் சதாசிவ தேசிகர். தமிழி லக்கிய வரலாறுடையார் இவர் காலத்தை கி. பி. 1686—1723 என்பர். சேதுநாடும் தமிழும் என்ற நூல் பதினேழாம் நூற்றாண்டு எனக் கூறும். சிவந்தெழுந்த பல்லவரையனை இவர் பாடியிருக்கிறார். அவன் ஆட்சிக் காலம் 1681 — 1686 வரை. பெருங்கொடை வள்ள லாகிய சீதக்காதி இறந்தமை குறித்தும் படிக்காசர் பாடி யுள்ளார். பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் என்பவர் படிக்காசுப் புலவரைப் பாராட்டி யுள்ளனர்.

திருக்கழுக்குன்றப் புராணம், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் முதலியன பாடிய அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவரும், ஒருதுறைக்கோவை பாடிய அமிர்த கவிராயரும் அந்தக்காலத்தில் உள்ள புலவர்களே. தளவாய் இரகுநாத சேதுபதிகளின் (கி. பி. 1645—1670) மீது நாணிக்கண் புதைத்தல் என்னும் துறை யொன்றுன் மட்டும் பாடப் பட்டதே அக்கோவை. திருக்கழுக்குன்றப் புராணம் பாடி அரங் கேற்றிய காலத்துச் செங்கற்பட்டில் அரசு செலுத் தியவர் திம்மய்ய நாயக்கர் என்பவர். அவர் கி. பி. 1680 வரை அரசு செலுத்தியிருக்கிருர்.

ஞானதேசிகர்களுக்கும், தம்பிரான் சுவாமிகட் கும் வேறு பாடறியார் பலர் உளர். ஞானதேசிகராவார் பீடாதிபத்தியம் பெற்று விளங்கும் தலைவர்கள். அவர் கள் தேசிகர் எனவும் பண்டார சந்நிதிகள் எனவும் வழங்கப் பெறுவர். பழங்காலத்திலே பண்டாரச் சந்நிதிகள் 'பண்டாரம்' எனவே வழங்கப்பட்டிருக்கின் றனர். உதாரணமாக: வினை வெண்பா வுரையிறுதியில்,......

**மரபறியார் கூற்றுக்களும் மரபும்**

"மெய்கண்ட சந்ததியில் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்தி மரபில் வேலப்பப் பண்டார மனுக்கிரகம் பெற்ற நமச்சிவாயத் தம்பிரான் செய்ததெனவறிக" என உள்ள குறிப்பைப் பார்க்க. தம்பிரான்களாவார் ஆசா ரிய அபிடேகம் பெருது துறவு பெற்றுள்ள திருத்தொண் டர்கள். ஆசாரிய அபிடேகம் பெற்ருல் தேசிகர் என அவர் வழங்கப்படுவர்.

திருவாவடுதுறை யாதீன வரலாற்றை ஆங்கில மொழியிலே எழுதப்புகுந்த ஓர் அன்பர், அவ்வரலாற்றிலே பல குழறுபடைகள் செய்துள்ளார். "நமசிவாய தேசிகர்

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் செய்தருளிய 'இருபா இருபது' என்னும் நூலுக்கும், ஸ்ரீ உமாபதி சிவம் அருளிய 'வினா வெண்பா' என்னும் நூலுக்கும் உரை செய்தார்" என்றார் அவர். திருவாவடுதுறை யாதீன ஸ்தாபகராகிய ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் தம்மை யடைந்த பக்குவர்கட்குச் சிவஞானோபதேசமும், சிவஞான போத முதலிய மெய்கண்ட சாஸ்திரோபதேசமுமே செய்து வீற்றிருந்தார்கள். நூலாவது உரையாவது அவர்கள் செய்தருளியதாக வரலாற்றில் இல்லை யென்பது தெளிவு.

இனி, நமச்சிவாயத் தம்பிரான் என்னும் பெயருடைய அடியார்கள் பலர் இவ்வாதீனத்தில் இருந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் பதினாறும் பட்டத்து மேலகரம் — ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்திலே மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணவராய்ச் சிறந்து விளங்கிச் சின்னப் பட்டத்திலே ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் என்னும் பெயருடன் இருந்தார்கள். அவரைப் பேட்டைப் பண்டார சந்நிதிகள் என்று கூறுவதும் உண்டு. வினா வெண்பாவுக்கு உரை செய்தவர் ஐந்தாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ வேலப்ப தேசிகர் அனுக்கிரகம் பெற்ற நமச்சிவாயத் தம்பிரான் என்பதும், அவர் அவ்வுரை செய்த காலம் கி. பி. 1678 என்பதும் அவ்வுரையின் இறுதியிலெழுதியுள்ள குறிப்பினால் நன்கு தெளிவாகத் தெரிகிறது. வேலப்ப தேசிகரும், நமச்சிவாயத் தம்பிரானும் மெய்கண்ட நூல்கட்கு உரை செய்திருக்கின்றனர். எனவே, 'இருபா இருபது' என்னும் நூலுக்கும் உரை வரைந்தார் அந்த நமச்சிவாயத் தம்பிரானே ஆவார். ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் அல்லர்.

இனி, ஆதீனத்து ஆங்கில வரலாறெழுதிய அந்தப் பேரன்பரே அவ்வரலாற்றிலே 'அம்பலவாண தேசிகர்' என்பவர் பதினைந்தாவது மடாதிபதி என எழுதி அவர் செய்ததாக மூன்றாவது பட்டத்து ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளிய நூல்கள் அனைத்தையுங் கூறி உலகுடைய நாயனாரைப் பதினைந்தாவது ஆசிரியரின் மாணவர் என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாதீனத்திலே 'அம்பலவாண தேசிகர்' என்னும் பெயருடன் பல தலைவர் வீற்றிருந்தாராயினும் மூன்றாவது பட்டத்து ஸ்ரீ அம்பலவாண தேசிகரே நூல்களும், உரைகளும் எழுதிச் சைவசித்தாந்த மரபிலே தமிழ நன்மக்களை நிலை பெறுவித்தவர் என்க.

இனி, தமிழிலே 'புலவர் வரலாறு' எழுதிய ஒரு பெரியார் இலக்கணக் கொத்து இயற்றியருளிய 'ஸ்ரீ சாமிநாத தேசிகர்' அம்பலவாண தேசிகர் என்பவருடைய சீடர் எனக் கூறி அந்நூலின் பாயிரத்தில் உள்ள குருவணக்கப் பகுதியை எடுத்துக் காட்டியுள்ளார். அப்பகுதி வருமாறு :—

"ஊரும் பேரும் உருவும் இல்லான்
ஆயினுந் திருவா வடுதுறை யூரனந்
தம்பல வாண னெனும்பெய ராதரித்
தறிவே யுருவா யமர்ந்தகுரு ராயனைப்
பொறையுடல் போகப் புகழ்ந்தடி போற்றுவாம்"

என்பது அது. இதனுள் "அம்பலவாண னெனும் பெயராதரித்—தறிவே யுருவா யமர்ந்த குருராயனை" என்னும் பகுதியை மட்டுமே நோக்கி அவர் அகச்சான்று கூறினர் போலும். இலக்கணக் கொத்துச் சிறப்புப் பாயிரத்திலே, பாயிரங் கூறியவர் கூறிய:—

"........வளமையின் வளர்புக ழுளவிய புனைட்
டேவடு விழியுமை யாவடு துறையில்
ஆசிலா வுயிர்க்கருள் மாசிலா மணிப்பெயர்
அம்பல வாணனென் றும்பரும் பரவ
வருஞான தேசிகன்"

என்னும் இப் பகுதியையும் அவர் உற்றுநோக்கி யிருப்பராயின் அம் மரபினை நன்கறிந்திருப்பார்.

"பிரமச்சரிய நிலையிலே துறவறத்தினராய்த் திருவாவடுதுறையின் கண் எழுந்தருளியிருந்துகொண்டு, ஆதீன பரம்பரையாகச் சித்தாந்தோபதேசம் நிகழ்ந்து வரும் வண்ணம் திருவுளங்கொண்டு, மாணாக்கர்களுக்கு அபிஷேகஞ் செய்து உபதேசித்தருளிய ஞானாசாரிய யாகிய நமச்சிவாய மூர்த்திகள் ஆதீனத்துக்குப் பிரதம பரமாசாரியரும், உபதேச பரம்பரை அங்குரித்தற்கு அருகராய் அப் பிரதமாசாரியர் காலத்தில் இருந்தருளிய அம்பலவாண தேசிகர் துவிதீயாசாரியருமானதால், இந்த ஞானாதீனத்துக்கு வந்தருளும் ஆசாரியர்கள் நைட்டிக துரியாச்சிரமிகளா யிருத்தலும், பெரிய பட்டத்தி லெழுந்தருளியிருக்கும் பொழுது அடியவர் முதலாயினருக்கு அனுப்பியருளுந் திருமுகங்களில் நமஶ்ஶிவாயம் ॥ எனவும், சின்னப்பட்டத்தி லெழுந்தருளி யிருக்கும்பொழுது அம்பலவாணர் துணை ॥ எனவும் திருக்கைச் சாத்திடுதலும் சாம்பிரதாயமாகப் பண்டைக் காலந் தொடங்கி இன்று காறும் நிகழ்ந்து வருகின்றன" என்னும் இவ்வாதீன வரலாற்றுப் பகுதியையும் அவர் அறிந்திலர்போலும். பெரிய பட்டத்தில் எழுந்தருளும் ஆசிரியரை நமசிவாய மூர்த்தியாகவும், சின்னப்பட்டத்து ஆசிரியரை அம்பலவாண தேசிகராக வும் போற்றுவது இவ்வாதீன மரபு.

ஸ்ரீ மாசிலாமணி தேசிகருக்குப் பின் ஒன்பதாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்தவர்கள் ஸ்ரீ இராமலிங்க தேசிகர் என்பவர்கள். இவர் திருமழபாடி என்னும் சிவதலத்திலே பரம்பரைச் சைவவேளாளரிலே அபிஷிக்தர் மரபிலே ஆளுடைய பண்டாரம் என்பவருக்கு இரண்டாவது புதல்வராக அவதரித்தவர். இளமையிலேயே இவர் நல்ல கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்து விளங்கினர். திருவாவடுதுறையை அடைந்தார்.

**9. ஸ்ரீ இராமலிங்க தேசிகர்**

இருவகைத் தீட்சையும், சைவ சந்நியாசமும் பெற்று அணுக்கத் தொண்டராய் ஆசாரியர் பணிவிடைகளை அன்புடன் செய்து வந்தார். ஸ்ரீ மாசிலாமணி தேசிகருக்குப் பின் இரண்டாவது ஆசிரியராக வுள்ள ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் சிவபரிபூரணம் அடைந்தமையும், மூன்ருவது ஆசிரியராகச் சங்காபிஷேகம் பெற்று ஈசான தேசிகர் என்னும் தீட்சாநாமத்துடன் விளங்கிய ஸ்ரீ சாமிநாத தேசிகர் சிவானந்த நிட்டையி லெப்பொழுதும் வீற்றிருந்தமையும் முன்பு கூறினேம். அதனால், ஸ்ரீ இராமலிங்க தேசிகரைத் தமக்குப்பின் ஞானசிரியராக இருந்து உபதேசம் செய்து வரத் திருவுளங்கொண்டு ஆசாரியாபிடேகம் செய்து பரம்பரையிலே தாம் பெற்ற சிவஞானத்தை முறையாக அவருக்கருளித் திருவெண்காட்டிலே ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சிவபரிபூரண மெய்தினர். இதுவும் முன்னர்க் கூறப்பட்டது.

இனி, ஸ்ரீ இராமலிங்க தேசிகர் தமதாசிரியர் ஆணைப்படி சிவஞான போத முதலிய நூல்களைத் தம்மையடுத்த பக்குவர்கட்கு உபதேசம் செய்து வீற்றிருந்தார். தமக்குப்பின் இரண்டாவது குரவராகத் தம் அடியவர் கூட்டத்துட் சிறந்திருந்த வேலப்பத் தம்பிரானுக்கு

ஆசாரியாபிடேகம் செய்து வேலப்ப தேசிகர் என்னும் பெயரைத் தீட்சா நாமமாகச் சூட்டி அமர்த்தினார்.

**தேவார ஓதுவார்கள்**

ஸ்ரீ இராமலிங்க தேசிகர் தேவாரத் திருமுறைகளிலே நல்லபயிற்சியும் இசையறிவும் பெற்று விளங்கிய காரணத்தால் தேவார முதலிய அருட்பாக்களை இன்னிசையுடன் பூசா காலங்களில் ஓதிவருமாறு ஓதுவார்களையும் நியமித்தார். அப்போது தாம் திருவவதாரம் செய்தருளிய திருமழபாடியிலே உள்ள ஒரு குடும்பத்தினரை அழைத்து வரச் செய்து அவரைத் திருவாவடுதுறையிலேயே நிலையாக இருந்துகொண்டு தேவாரம் ஓதிவரக் கட்டளையிட்டருளினர். அக் குடும்பத்திலே அப்போதிருந்த முதல்வர் அம்மையப்ப பண்டார ஓதுவாமூர்த்தி என்பவர். அவர் குமாரர் நமசிவாய பண்டார ஓதுவாமூர்த்தி. அவர் குமாரர் மாறியாடும் பண்டார ஓதுவா மூர்த்தி. அவர் குமாரர் ஆளுடைய பண்டார ஓதுவாமூர்த்தி. அவர் குமாரர் வைத்தியலிங்க பண்டார ஓதுவாமூர்த்தி. அவர் குமாரர் குருசாமி ஓதுவா மூர்த்தி. அவர் குமாரர் வைத்தியலிங்க ஓதுவாமூர்த்தி. அவர் குமாரர் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி. அவர் குமாரர் பொன்னோதுவா மூர்த்தி. இவருள் வைத்தியலிங்க பண்டார ஓதுவாமூர்த்திகளின் குமாரர் குருசாமி ஓதுவா மூர்த்தியைப்பற்றி ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளின் மாணவர் மதுரகவி — தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் பாராட்டிப் பாடல் செய்திருக்கிறார். அவர் காலம் கி. பி. 1789 ஆம். ஸ்ரீ இராமலிங்க தேசிக சுவாமிகள், காலத்திலே வந்த அம்மையப்ப பண்டார ஓதுவாமூர்த்தி முதல் குருசாமி ஓதுவார் வரை 6 தலைமுறைகளாகின்றன. 1658 முதல் 1789 வரையுள்ள ஆண்டுகள் 131 ஆகின்றன. தலைமுறை யொன்றிற்கு

ஏறக்குறைய சராசரி 22 ஆண்டுகள் வீதமும், அதன்பின் 1935 வரை 146 ஆண்டுகளில் 3 தலைமுறைகளில் சராசரி 48 ஆண்டுகள் வீதமும் தலைமுறைகள் கணக்கிடப்படும். குருசாமி யோதுவார் வரை தேவார இசைப் புலமை யிருந்து வந்தது போலவே அவருக்கும் அவர் பின்னோருக்கும் இயற்றமிழ்ப் புலமையும் இருந்து வந்தது. இறுதியாக வைத்தெண்ணப்பட்ட ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் ஒப்புயர்வற்ற பெரும்புலவராக ஆதீனத்தில் இருந்து விளங்கியவர். பல நன்மாணவர்கட்குப் பாடஞ் சொல்லி நன்மதிப்புப் பெற்றவர்கள்.

ஸ்ரீ இராமலிங்க தேசிகர் வைதிக சைவ சித்தாந்த சமயத்தைக் கண்ணுங்கருத்துமாய் உலகத்துப் பரவச்செய்து வந்ததுபோலவே, லௌகிக காரியங்களிலும் கண்ணுங்கருத்துமாய் இருந்து ஆதீனத்திலே பல ஒழுங்கு நடைமுறைகளைச் செவ்வைப்படுத்தி அமைத்துள்ளார். இவர்கள் காலத்திலேயும் சின்னப்பட்டத்திலிருந்த வேலப்ப தேசிகர் என்பவர் சுசீந்திரத்திலேயிருந்துகொண்டு சீடர்களுக்கு அனுக்கிரகம் செய்து வந்தார். இவ்வாறு பீடத்திலிருந்து சிவஞானச் செங்கோல் செலுத்தி வரும்போது திருவாவடுதுறையிலே ஓர் கார்த்திகை மாதத்து அனுஷ நட்சத்திரத்திலே ஸ்ரீ இராமலிங்க தேசிகர் சிவபரிபூரண முற்றருளினார்கள்.

ஸ்ரீ இராமலிங்க தேசிகர் சிவபரிபூரணம் அடைந்தவுடன் சின்னப்பட்டத்தி லெழுந்தருளியுள்ள ஸ்ரீ வேலப்ப தேசிகர் ஞானபீடத் தெழுந்தருளித் தம்மை யடைந்த பக்குவர்கட்குச் சிவஞானோபதேசமும், சிவஞானபோத முதலிய சாஸ்திரோபதேசமுஞ் செய்து கொண்டு வருவாராயினர். பின்பு தமது அடியார்களுட் சிறந்து விளங்கும் வேலப்பத் தம்பிரான் என்னும்

பெயருள்ள ஒருவருக்கு நிர்வாண தீட்சையும் சிவஞானோபதேசமும் செய்தனர். சிலகாலம் சென்று அவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து வேலப்ப தேசிகர் என்னும் தீட்சா நாமமும் கொடுத்து அவரைச் சின்னப்பட்டத்திலே அமைத்துச் சுசீந்திரத்திலுள்ள தமது மடாலயத்திலே வழக்கம் போல இருக்கச் செய்து அங்குள்ள சீடர்களுக்கு அனுக்கிரகமும் சிவஞானோபதேசமும் செய்துவரக் கட்டளையிட்டருளினார். ஒரு காலத்திலே வேலப்ப தேசிகர் இருவர் இருந்தமையின் 10-வது குருமகாசந்நிதானம் முன் வேலப்ப தேசிகர் என்று கூறப்பட்டார்.

**10. ஸ்ரீ வேலப்ப தேசிகர்**

இந்த ஞான குரவருடைய அடியார்களுள் ஒருவராகிய சாஸ்திரம்—ஸ்ரீ சாமிநாத முனிவர் 2600 செய்யுட்களுள்ள திருவாவடுதுறைப் புராணத்தை இயற்றினார். தஞ்சையை யாண்ட. துளஜேந்திர மகாராஜா விருப்பப்படி (1763—1787) திருப்பெருந்துறைப் புராணத்தையும் இயற்றியருளினார். அதன் செய்யுட்டொகை—1270. இப் புராணத்தை இயற்றுமுன் திருப்பெருந்துறைக் கலம்பகம் என ஒரு பிரபந்தம் இவரால் இயற்றப் பெற்றுள்ள தென்றும், அக் கலம்பகம் இப்பொழுது கிடைக்கவில்லை யென்றும் மகாமகோபாத்தியாய—ஸ்ரீமத் ஐயரவர்கள் கூறுவர்.

**சாஸ்திரம் சாமிநாத முனிவர்**

சின்னப்பட்டத்திலேயிருந்த பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர் சுசீந்திரத்திலே வீற்றிருந்து தமது ஞானாசிரியர் கட்டளைப்படி தம்மை யடுத்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்து வருவாராயினர். அக்காலத்திலே பஞ்சாக்கரப்

**பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர்**

பஃறொடை என்னும் ஒரு ஞானநூலை இயற்றியுபகரித்தனர்.

தமிழ் மக்கள் உய்யும் வண்ணம் இவ்வாதீனத்து உபய சந்நிதானங்களும், தம்பிரான் சுவாமிகளும், அடியவர் கூட்டங்களும் அடிக்கடி தமிழ் நாட்டிலே சிவதலயாத்திரை செய்து அங்கங்கேயுள்ள அன்பர்கட்கு அனுக்கிரகம் புரிந்து சிவபத்தி குருபத்தி அடியார் பத்தி முதலியன குன்றாமல் தமிழ் மொழியையும் சித்தாந்த சைவ சமயத்தையும் வளர்த்து வருவாராயினர். சில

**தம்பிரான்களும் தலயாத்திரையும்**

சமயங்களில் அற்புதச் செயல்களால் மக்களை வசமாக்கி ஆதீனத்துக்கு அடிமைப்படுத்தி அன்பு வளரச் செய்தனர். பலருக்கு நோய்களைப் போக்கி உபகாரமும் செய்து அவர்களால் மனமுவந்து கொடுக்கப்பட்ட பொருள்களை ஆதீனத்திலே சேர்த்தும் வந்தனர். தம்பிரான்களில் பலர் வித்துவான்களாகவும், மந்திரசித்தி பெற்றவர்களாகவும், மருத்துவ முறையிலே தேர்ந்தவர்களாகவும் இருந்து ஆதீனத்துக்குப் பல்லாற்றானும் நன்மையும் நன்கு மதிப்பும் உண்டாகுமாறு செய்து வந்தனர். ஞான தேசிகர்கள் உலகுக்குப் பயன்தரத்தக்க தம்பிரான்கள் முகமாக எல்லாவாற்றானும் மக்கட்குப் பயன்பட்டு வந்தனர். அதனால் அரசரும், அரசச் செல்வமுடைய பிரபுக்களும், தமிழ் மொழி வடமொழி வல்ல பெரும்புலவர்களும், பொதுமக்களும் அடிக்கடி வந்து ஞானதேசிகரைத் தரிசித்து அளவளாவியிருந்து மகிழ்ந்து செல்வர். ஆதீனத்தின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

மகத்துவமிக்க அகத்திய முனிவர் வரத்தினால் ஏழுதலைமுறைவரையும் அருட்புலமை நிரம்பவரம்

பெற்ற பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் ஒரு குடியிலே ஆனந்தக் கூத்தர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் குருபத்தி, சிவ பத்தி, அடியார் பத்திகளில் சிறந்தவர். கல்விச் செல்வம் போலவே பொருட் செல்வமும் ஒருங்குடையவர். திருவருட் செல்வமும் வாய்க்கப் பெற்றவர். அவர் மனைவியார் அருந்ததி யன்ன பெருந்துதிக்குரிய மயிலம்மையார் என்பவர். அவ்வம்மையார் திருவயிற்றிலே, ஏழாவது தலைமுறையாகத் தமிழ் நாடு செய்த தவத்தானே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தனர். முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமத்துடன் அவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளருவாராயினர். அக் குழந்தை வளர வளர ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களும் வளர்வனவாயின.

**முக்களாலிங்கர் பிள்ளைப்பருவம்**

இவ்வாறாக, ஒரு சமயம் சிலதம்பிரான்கள் சிவதல யாத்திரை செய்து கொண்டு பாண்டிவள நாட்டிலே பொதியில் மலைச் சாரலிலே பாவநாசம் என்னும் திருப்பதிக்குச் சென்று சிவதரிசனம் செய்து விக்கிரம சிங்கபுரத்தின் வழியே வருவாராயினர். அப்பொழுது அவ்வழியிலே அத்தம்பிரான்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரு பிள்ளைப் பருவத் திருவுருவந் தோன்றியது. தம்பிரான்கள் அவ்வுருவொளியைக் கண்டு வியந்து அசைவற நின்று விட்டனர். அதுவே சிவஞான வொளியாம். அவ்வொளிப் பிழம்புத் தோற்றத்தை இங்கே ஆராய்வோம்.

*முக்களாலிங்கர் ஐந்து பிராயத்திலே தாய் தந்தையரால் வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்றுப் பாடசாலையில் அமர்ந்து கல்வி பயின்று வந்தனர். ஒரு

முக்களாலிங்கரும் முனிவர்களும்

நாள் பள்ளியினின்று வீட்டிற்கு வரும்பொழுது வழியிலே திருவாவடுதுறை முனிவர்களைக் கண்டார். தரிசித்து வணங்கினர். 'சுவாமிகள் எல்லோரும் கிருகத்துக்கு எழுந்தருளித் திருவமுது செய்து, பின்பு சென்றருள வேண்டும்' என்று பிரார்த்தித்தார். அம்முனிவர்கள் ஆண்டின் இளையரும் அறிவின் முதியருமாகிய முக்களாலிங்கர் வழிபாட்டிற்கு இரங்கி, விருப்பத்தோடு உடன்பட்டனர். உடன்பட்ட அம்முனிவர்கள் முக்களாலிங்கர் பிறகே கிருகத்துக்குப் போயினர். முக்களாலிங்கர் அருமைக் கருத்தை யுணர்ந்து அருந்ததியினுஞ் சிறந்த மயிலம்மையார் உபசரிக்கத் திருவமுது செய்து முனிவர்கள் சென்றருளினர்.

தாயாரைப் பாராட்டுதல்

முக்களாலிங்கர் தமது கருத்தின்படி அடியார்களை உபசரித்த தாயாரைப் பற்றிக்கீழ்வருமாறு ஒரு பாராட்டு வெண்பாக் கூறி மகிழ்வித்தார். அது வருமாறு:—

"அருந்ததி என்னம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி — பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்" என்பது.

புறத்தே போயிருந்த ஆனந்தக் கூத்தர் வீட்டிற்கு வந்தார். நிகழ்ந்த அற்புதச் செய்திகளைக் கேட்டார். பேரின்பக் கடலிலே முழுகினர்.

உடனே ஆனந்தக் கூத்தர் முக்களாலிங்கரோடு ஆதீன முனிவர்களிடத்தே சென்றார். வணங்கினர். சத்திநி பாதத்துத்தமராகிய அப்புத்திரர் பிறவிப் பெருங்

**முக்களாலிங்கர் முனிவரைப் பின் தொடர்தல்**

துன்பக் கடலினின்றுங் கரையேறக் கருதினார். அம்முனிவர் பெருமக்களோடு தாம் செல்லவேண்டும் என்னுங் குறிப்பினைத் தந்தையாருக்கு உணர்த்தினார். புத்திரரைப் பிரியத் தந்தையாருக்குச் சிறிதும் மனமில்லை. பின்பு அவர் ஒருவாறு இசைந்து வீட்டிற்குத் திரும்பி விட்டார்.

தந்தையார் நீங்கிய பின்பு, முக்களாலிங்கர் ஆதீனத்து முனிவர்களோடு வழிக்கொண்டார். மார்க்கங்களிலுள்ள சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு சோணாட்டிலுள்ள திருவாவடுதுறையை அடைந்தார், மடாலயத்தினுள்ளே புகுந்தார். ஆதீன பரம முதற் குரவராகிய நமச்சிவாய மூர்த்திகளைத் தரிசித்துத் திருவருள் நோக்கம் பெற்றார். அப்பொழுது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசிரியராகிய பின் வேலப்ப தேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினார்.

**ஞானாசிரியரை முக்களாலிங்கர் அடைதல்**

வணங்கியவர் ஞான தேசிகரிடத்தே சைவ சந்நியாசமும், சிவதீட்சையும், சிவஞான யோகிகள் என்னும் தீட்சா நாமமும் பெற்று மெய்கண்ட சாஸ்திரங்களையும் கேட்டருளினார். சிவஞான யோகிகள் அகத்திய மகாமுனிவர் வரத்தால் அவதரித்தருளியவராகலின் எளிதிலே வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் முற்றொருங் குணர்ந்தார். மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் அமர்ந்தருளினார்.

**ஸ்ரீ சிவஞான யோகிகள் என்னும் தீட்சா நாமம் பெறுதல்**

ஸ்ரீ வேலப்ப தேசிகர் ஸ்ரீ சிவஞான யோகிகளுக்கு உபதேசித்தருளிய ஞானசிரியர் என்பது:—

" எவ்வெவகோட் படுபொருளும் அஞ்செழுத்தின்
அடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகை அஞ் சவத்தையி லும் நிற்குமுறை
ஓதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தின் உள்ளீடும் அறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையும் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்தாள் சென்னி சேர்ப்பாம் "

எனக் காஞ்சிப் புராணத்துக் கூறிய குரு வணக்கச் செய்யுளால் விளங்கும்.

**நூல்களும் உரைகளும் இயற்றியருளல்**

ஸ்ரீ சிவஞான யோகிகள் ஜமதக்கினி முனிவருடைய புதல்வரும், அகத்திய மகாமுனிவருடைய முதல் மாணவரும், இடைச்சங்கப்புலவர் ஐம்பத்தொன்பதின் மருள் ஒருவருமாகிய திரணதூமாக்கினி என்னும் தொல்காப்பிய முனிவர் அருளிச்செய்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர் செய்த உரையாகிய இளம்பூரணமும், சேனவரையர் செய்த உரையாகிய சேனவரையமும், நச்சினர்க்கினியர் செய்த உரையாகிய நச்சினர்க்கினியமும் எனப்படும் மூன்று உரைகளினும் உள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும் பொருட்டு அத் தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்குஞ் சூத்திரவிருத்தி யெனப் பெயர் பெற்ற பாடியமும், வடமொழித் தருக்க சங்கிரக

அன்னம் பட்டீயங்களின் மொழி பெயர்ப்பும், நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த புத்துரையாகிய விருத்தியுரைத் திருத்தமும் செய்தருளினார். இவை மூன்றும் திராவிடமா பாடியத்துக்கு அங்கங்கள் எனப்படும்."

"அன்றியும், சர்வாத்மசம்பு சிவாசாரியார் அருளிச் செய்த சுத்திய ரூப சித்தாந்தப் பிரகாசிகையை அவ்வாறே மொழி பெயர்த் தருளினார். அன்றியும் ஸ்ரீ மெய்கண்ட தேவர் மொழி பெயர்த் தருளிய வார்த்திகப் பொழிப்போடு கூடிய சிவஞான போதத்திற்கு ஆசிரியர் அமைத்தருளிய மெய்ப் பொருள் விளங்கும் வண்ணம் திராவிட மாபாடியம் எனப் பெயர் பெற்ற விருத்தியுரையும், இலகு வியாக்கியானமாகிய சிற்றுரையும், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் அருளிச் செய்த சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குப் பொழிப்புரையும் செய் தருளினார்."

"அன்றியும், காஞ்சிப் புராணத்தின் முதற் காண்ட மொழி பெயர்ப்பும், சிவாக்கிய சோழமகாராஜா காலத்திலே கஞ்சனூரிலே அவதரித்தருளிய ஆசாரிய சரணராகிய ஸ்ரீ அரதத்த சிவாசாரியர் வைணவமதகண்டனம் செய்து சைவமத ஸ்தாபனம் செய்யும்பொருட்டு, நெருப்பிலே பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலியிலே எழுந்தருளியிருந்து சிவபெருமானே பரம்பொருளென இருபத்திரண்டு ஏதுக்களாலேநாட்டியருளிய சுலோக பஞ்சகத்தின் மொழிபெயர்ப்பும், ஸ்ரீ அப்பதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகமூல சுலோகங்களின் மொழிபெயர்ப்பும் செய் தருளினார்."

"அன்றியும், பெரும்பாலும் உண்மை நாயன்மார் சரித முதலியவற்றைத் தழுவிப் பூருவார்த்தமும் அதற்கு எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவநாயனார் திருக்குறள்

உத்தரார்த்தமுமாகக் கொண்டு சோமேசர்மீது முதுமொழி வெண்பா, யமகரூபமான திருவேகம்பரந்தாதி, திருக்ரூபமான திருமுல்லைவாயிலந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கச்சி ஆனந்தருத்திரேசர்பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம், மார்கழி மதித் திருவாதிரை யுற்சவத்திலே தேவார முதலிய அருட்பாக்கள் ஐந்தும் திருக்காப்பிடப்பட்டுத் திருவெம்பாவை யென்னுந் திருவாசகத் திருப்பதிகம் ஒன்றுமே ஆன்மார்த்த பரார்த்த சிவபூஜா காலங்களில் ஓதப்பெற்று வருஞ் சாம்பிரதாயத்தால் நித்தநியமமந்திரமாகத் திருத்தொண்டர் திருநாமத்தை ஓதியுய்யவேண்டுவோர் கருத்துத் தடையுறு வண்ணந் திருத்தொண்டர் திருநாமக்கோவை, ஆதிபரமாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகண்மீது மாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினார்."

"அன்றியும் மரபட்டவணை எனப் பெயர்பெற்ற திருவாவடுதுறை ஆதீன சாம்பிரதாயக் கட்டளையைத் தருமபுர ஆதீனத்தார் மறுத்தெழுதியதற்கு மறுப்பின் மறுப்பு என ஒன்று செய்தருளினார்."

"சித்தாந்த மரபு கண்டன கண்டனமென்பது சித்தாந்த மரபும், அதன் கண்டனமும், மற்றதன் கண்டனமும் என மூன்றும். இம் மூன்றனுள் சித்தாந்த மரபு எழுதினவர் திருவாவடுதுறை ஆதீனத்தாருள் ஒருவரென்பர். சித்தாந்த மரபு கண்டன கண்டனத்துத் தொடக்கத்தில் 'குழறு பாடாய் அகப்பட்ட தொன்றனைத்

**சித்தாந்த மரபு கண்டன கண்டனச் செய்திகள்**

தம்மாற் குறிக்கப்பட்டோர் கொண்ட மரபென மயங்கிக் கொண்டு' என்றும், பகுதி 34ல் "

"......அவ்வாறு கூறுவார் ஈண்டு யாருமில்லை. எவரோ குழறு படையாக எழுதிவைத்த தொன்றனைக் கைப்பற்றிக் குற்றங்கூறப் புகுந்தீர். 'பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினன்' என்றது போல, நும் அறிவின் குழறுபடைக் கேற்பவே அதுவும் குழறுபடையாய் நுமக்கு வந்து வாய்த்தது" என்றும்,

"ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்வதால், சித்தாந்தமரபு என்னும் நூல் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரமாண நூல்களில் ஒன்றன்று என்பது அறியப்படும்."

"...மேலே காட்டப்பட்ட ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளது திருவாக்குக்களாற் 'சித்தாந்த மரபு' நூல் குழறுபடையான நூலென்பதும், அஃது அநாமதேயியாகிய எவராலோ எழுதப்பட்ட தென்பதும், திருவாவடுதுறை யாதீனத்து மரபு அன்று என்பதும் தெளிவாகும். ஆனால் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் இச் 'சித்தாந்த மரபு' நூலை மறுத்த சித்தாந்தமரபு கண்டன நூலுக்குச் 'சித்தாந்த மரபு கண்டன கண்டனம்' அருளிச் செய்தவாறு என்னை? என்னும் வினுப்பின் நிகழ்வதாகும். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் கண்டன கண்டனத்தின் தொடக்கத்தில் 'இதன்கண் ஆண்டாண்டு ஆசங்கித்தற்குரிய தகுதியுடையவாய் ஆசங்கிக்கப் படுவனவும் அவற்றிற்கு உத்தரமும் பலபல உளவாகவும், அவற்று ளொன்றுயினும் அறிந்தெடுத்து ஆசங்கிக்கமாட்டாது, சிறுபெண்கள் சிறுசோறட்டுண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறு போல ஆசங்கித்தற் குரியன அல்லாதவற்றை ஆசங்கித்துக் குற்றம்போலச்

சிலகூறி' என அருளிச் செய்வதால் ஆசங்கித்தற்குரியன அல்லாதவற்றை ஆசங்கித்துக் குற்றம்போலச் சிலவற்றைக் கண்டன நூலார் கூறினமையின் அவற்றின் பொருந்தாமையை அறிவித்தற்கு ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் 'கண்டன கண்டனம்' அருளிச் செய்தார்கள் என்க."

"முன்னுரை:—மெய்கண்ட தேசிகன் சந்தானத்தின் எய்தி மெய்கண்ட நூலை ஆராய்ந்து சித்தாந்த சைவப் பொருளுண்மையை உணர்தற்குரிய தவம்.

பகுதி 1. சடத்துவ சாதிக்கும் அறியாமைச் சாதிக்கும் வேற்றுமை.

,, 7. பூற்றுவமை ஒன்றற்குங் கூடாது.

,, 11. இருவினை யொப்பு என்பதற்கு வினைமுதற் பொருண்மை யுணர்த்தும் காரகசட்டி விரித்துரைப்பின், அவ்விருவினையொப்பு உண்டாயினும் அஃது ஒருவாற்றானும் முத்திக்குக் காரணமன்று...... இனிக்காரக சட்டியை விரிப்பினும், சமபுத்தி செய்வோன் அறிவின்கண் இருவினையும் ஒருதன்மையவாய் ஒத்தல் இருவினை யொப்பு எனப் பொருள் தருதற்கு இழுக்கு என்னை?

**கண்டன கண்டனத்திற் காணப்படும் அரிய செய்திகளும் உரிய இடமும்**

பகுதி 12. மென்மை வன்மைகள் நோக்கி நிராகரணச் சுருதிக்கு ஏற்ப மதசங்கற்பத்திற் கூறியதற்கு இணங்கிவரும் சுருதிக்குப் போக்கு விடுவதன்றி, மதசங்கற்பச் சுருதிக்கு ஏற்பச்

சித்தாந்த முடிவினின்று நிராகரிக்கும் நிராகரணச் சுருதிக்குப் போக்குவிடுதல் பொருந்தாது.

சிவஞானமே அனுக்கிரகிப்பதன்றி ஆன்மா அனுக்கிரகிக்கமாட்டாது.

சிவஞானம் வெளிப்பட்டு விளங்கிய ஆன்மா மாட்டு நிகழும் வியாபார மெல்லாம் பேய் ஆவேசிக்கப்பட்டவன் மாட்டு நிகழும் வியாபாரம் போலு மென்பது 'பதார்த்தங்கள் பாரார்' 'பரமே பார்த்திருப்பர்' எனப்பட்ட மெய்ஞ்ஞானிகள் நிற்கும் நிலை.

பகுதி 18. புண்ணிய பாவங்களைக் கழித்தலும் அனுக்கிரகத் தொழிலின் அடங்குவதன்றி மற்றொரு தொழிலினும் அடங்காது.

,, 21. ஆன்மாப் பெத்தத்திற் சிற்றறிவும் பரதந்திரமு முடையன், முத்தியின் முற்றறிவும் சுதந்திரமு முடையன் என்னும் சுருதியும், முத்தியினும் சிற்றறிவும் பரதந்திரமுமே யுடையன் என்னும் சுருதியும் தம்முள் முரணுதவாறு பொருளொருமை யுணர்ந்து ஏக வாக்கியதை செய்துகொள்ள.

,, 24. சைவ சித்தாந்தத்திற் கூறும் குணகுணி விவகாரம்.

,, 25. முந்திய சிருட்டியில் விபுவாகிய ஆன்மாப் புரியட்ட சரீர பேதங்களைப் பற்றுதற்கே படிகமலை அக்கினிமலை யுவமை.

ப. 27,30. தூலாருந்ததி நியாயமாய்க் காணப்பட்டு நிகழும் நிகழ்ச்சி கொண்டு காணப்படாத பொருளைத் தெரிவித்தல் சிவாகமங்களின் துணிபு.

,, 43. காலமும், காலத்தில் நிகழ் பொருளுமாகிய அவ்விரண்டிற்கும் வேற்றுமை பெரிது.

,, 48, ஆண்டுப் பொருளென்றது உடம்புபோல் ஒற்றுமை யுடைத்தாய்த் தன்னால் நுகரக் கிடந்த உடல்வினையே யன்றி, முன்பே தன்னால் துறக்கப்பட்டு ஒழிந்த புறப்பொருளன்று.

,, 50, 51. விஞ்ஞானகலர், பிரளயாகலர் கலையோடு கூடினும் துடக்குண்ணாமையின் அகலரே யாவர்.

,, 54. விட்டு நீங்கிய பின்னன்றி அன்னியமாகக் காண்டல் கூடாது. வியாபகப் பொருள் ஒன்றிற் கூடுமாறும் நீங்குமாறும் ஏகதேசப் பொருள் ஒன்றிற் கூடுமாறும் நீங்குமாறும் போலல்ல.

,, 56. சத்தி சத்திமான்களுக்குத் தாதான்மிய சம்பந்தத்தால் வேற்றுமை யுண்மை.

,, 57. (அ) சந்ததி யறிதற்கு முந்திய அடையாளம் அவ்வச் சந்ததி பற்றிவரும் தீக்கை வேறுபாடு.

(ஆ) ஞானபாத முழுதும் உபதேசகலை.

(இ) மந்திர கலைக்கு மேற்பட்ட ஞானபாதம்.

(ஈ) முத்தி பஞ்சாக்கரத்தின் முறை சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மை விளக்கம் முதலிய மெய்கண்ட நூல்களிற் கூறிய முறை.

(உ) சிவத்தில் அருள் வியாப்பியம்.

(ஊ) சிவத்துக்கும் சத்திக்கும் வஸ்துபேதமின்மை.

(எ) தற்கால சந்தி ஒரு தினம் தவறினும் பதிதத்துவமாம்.

(ஏ) சிவபூசையில் சாமானியார்க்கிய நீர் ஆட்டும் அளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆசனம் மூர்த்தி வித்யாதேகம் ஆவாகனாதி; அதன்பின் அபிடேக முதலாயின.

(ஐ) சற்குரு சந்ததி என்பது பலவாற்றானும் எல்லார்க்கும் இனிது விளங்குதற்குரிய பெருந்தகைமை யுடைய மரபு.

பகுதி 59. ஓரியல்புபற்றி ஒன்றற் குவமையாக எடுத்துக் காட்டிய பொருளை மற்றோரியல்பு பற்றிப் பிறிதொன்றற்கு உவமையாக வைத்து ஓதுதல் எல்லா நூல்கட்கும் துணிபு என்பன முதலாயின."

"கண்டன நூல் என்ற மாத்திரத்தில் இக்காலத்தில் சிலருக்கு ஒருவகை வெறுப்பு ஏற்படக் காண்கின்றோம். அங்ஙனம் வெறுப்பு ஏற்படக் காரணம் இல்லாமலில்லை. இடைப்பட்ட காலத்தில் ஏகான்மவாதிகளும்

வைணவர்களும் சைவதூஷணம் செய்த காலத்தில்

**போற்றத்தக்க கண்டன நூல்கள்**

அவர்கள் எழுதிய நூல்களிலும் அதற்கு மறுப்பாக எழுந்த நூல்களிலும் சில இடங்களில் நூல் எழுதினூர் மீதும் நூலிற் கூறப்பட்டார் மீதும் வசைமொழி யடுக்குகள் காணப்படுகின்றன. ஆனால், முற்காலத்துக் கண்டன நூல்களில் விஷயங்களின் பொருந்தாமை மட்டும் விளக்கப்படும். இங்ஙனம் இரண்டற்கும் வேற்றுமை பெரிதாகலான், முற்காலத் துக் கண்டன நூல்கள் போற்றத்தக்கனவேயாம். அன்றியும் அவற்றால் விளையும் பயன்களும் பலவுள. இக்காரணம்பற்றி ஒருசாரார் இந்நூல்களை எதிர்நூல் (Controversial Literature) எனப் போற்றுவாராயினர்."

"அன்றியும் காஞ்சீபுரத்தில் யாத்திரையாக வந்தருளிய திருவண்ணமலை ஆதீனத்துப் பண்டார சந்நிதிகள் "சிவஞான சித்தியாரில் 'என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத்து' என்னுஞ் செய்யுளில் (எடுத்து) என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்னை" என்று தம்மாதீனத்து ஞானப்பிரகாச முனிவர் இயற்றிய சிவசமவாத உரையின் உயர்வு தொனிக்கும் வண்ணம் சிவஞான யோகிகளிடத்தே வினவுவித்தபொழுது, (எடுத்து) என்னுஞ் சொல்லுக்குச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றும், அதன்மேற் பிரதிகண்டனம் உண்டாயவழி மேன் மறுத்த மறுப்பு குதர்க்கவுரையாளராற் போழப் படாதவாறு (எடுத்து) என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம் என ஒன்றும், சிவஞானசித்தியாருக்கு ஞானப்பிரகாச முனிவர் இயற்றியவுரை முற்றும் போலியுரை என விளக்கச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றும் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் செய்தருளினூர்."

"அன்றியும் கம்பராமாயண காவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்பதெனச் செருக்கொடு கழறிய காஞ்சீபுரத்து வைணவர்கள் வாயை அடைக்கக்கருதி அக் கம்பராமாயணத்து நாந்தியாகிய "நாடிய பொருள் கைகூடும்" என்னுஞ் செய்யுள் முற்றும் குற்றமே எனச் சங்கை செய்தவழி, அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு உத்தரஞ் சொல்ல இயலாமல் வருந்தித் தெரியாது பிதற்றினேம் எனச் சொல்லி வணங்கித் துதித்தவழி, சிவஞானயோகிகள் மகிழ்ந்து உத்தரங்கூறி, அவ்வைணவர்களை உவப்பித்தருளினர். அச்சங்கையுத்தரங்களை வரைந்த நூலுக்கு "கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்று பெயர் வழங்கிவருகின்றது."

"அன்றியும் திருவாரூர் வயித்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்கத்தில், எழுத்ததிகாரம் சொல்லதிகார முதலியவற்றிலுள்ள வழுக்களை வெளியிடக்கருதி இலக்கண விளக்கச் சூருவளி என ஒன்று செய்தருளினர்."

"திருநாவுக்கரசு நாயனர் கடலினின்றுங் கரையேறிய திருப்பாதிரிப் புலியூர்ச் சிவாலயத்தின் கண்ணே, சில வித்துவான்களும் பிரபுக்களுங் கூடிய சபையில் நூறு பொன்னைக் கிழியாகக் கட்டிவைத்து, "கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ" என்று ஈற்றடியெடுத்துக் கொடுத்துச், செய்யுளைப் பூர்த்திசெய்பவர் "இப்பொற்கிழியை எடுத்துக்கொள்ளலாம்" என்று சொன்னர்கள்; அப்பொழுது யாத்திரையாக வந்தருளிய சிவஞானயோகிகள் ஆலயத்துக்கு எழுந்தருளுங்கால் அங்கு நிகழ்ந்த செய்தியை யுணர்ந்து, ஒரு ஏழைப் பிராமணரை நோக்கி அப் பொற்கிழியை எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டு—

*" வரையேற விட்டமுதஞ் சேந்தனிட
வருந்தினைவல் வினமென் ருலு
முரையேற விட்டமுத லாகுமோ
வெனைச்சித்தென் று ரைக்கி லென்ற
நரையேற விட்டமுத ளைவனைக்
கொண்டுநறும் புலிசை மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை
யன்றியுமோர் கதியுண் டாமோ"

என்று செய்யுளைப் பேசுவதுபோலப் பூர்த்தி செய்தருளினர்."

" இங்ஙனம் உலகோபகாரமாகப் பலவுரைகளையும் பல நூல்களையும் பல கண்டனங்களையும் செய்து பல நன்மாணுக்கர்களுக்குப் போதித்து, வடமொழியினுந் தென்மொழி சிறந்ததென்னும்படி அபிவிருத்தி செய்து, தவமே திருவுருக்கொண்டாற்போலும் விளங்கிச் சிவப் பேற்றிற்குக் காரணமாகிய நிட்டையில் விற்றிருந்தருளிய

---

*வரையேல்—என்னை நீக்காதே. சேந்தன் தவிட்ட முதம் இட அருந்தினை; தவிட்டமுதம்—தவிட்டாலாக்கிய களியை. உரையே—சொல்லுவாயாக. 'ற' இ 'ட' வல்லினம் என்ருலும் முதலாகுமோ — றகரமும் இந்த டகரமும் வல்லினமாக இருந்தாலும் மொழிக்கு முதலாகுமோ; ஆகா. உன்னைப்போல எனக்குச் சித்தென்னும் பெயர் வழங்கினும் நான் முதன்மை உறுவேனு; அடிமைத் தன்மையையே உடையேன் என்றபடி. அவிட்டம் முதல் நாளவனை நரையேருக்கொண்டு—அவிட்ட நட்சத்திரத்திற்கு முதல் நாளாகிய திருவோணத்திற்குரிய திருமாலை இடபவாகனமாகக்கொண்டு, வடபுலிசை — திருப்பாதிரிப்புலியூர். கரையேறவிட்டவர் என்பது அந்தத் தலத்திலெழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம்.

திராவிட மகாபாஷ்ய கர்த்தராகிய சிவஞானயோகிகள் திருவாவடுதுறையிலே சித்திரைமதி ஆயிலிய நக்ஷத்திரத்திலே சிவபரிபூரணம் அடைந்தருளினர்."

"மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்"

என்னும் வெண்பாவால் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் சிவபரிபூரண முற்ற காலம் தெளியலாம். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் அரங்கேற்றிய காலம் கி. பி. 1772: சிவபரிபூரணமுற்றது கி. பி. 1785: முப்பத்திரண்டாம் பிராயம் என்பர்.

## நன்னூலுக்கு விருத்தியுரை செய்யக்காரணம்

"சிவஞானபோதப் பேருரை முதலியவற்றில் தம்மால் அமைக்கப்பெற்றுள்ள அரிய வடமொழி தென் மொழிப் பிரயோகங்களை எளிதிற் பிற்காலத்தவர்க்குப் புலப்படுத்த நினைந்து இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளியென்னும் நூல்களிலும் பிறவற்றிலும் உள்ள இன்றியமையா தனவாகிய சிலவற்றை உரிய இடங்களிற் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் சங்கர நமச்சிவாயர் செய்த நன்னூல் புத்துரை செப்பம் செய்யப் பெற்று விருத்தியுரை என வழங்கலாயிற்று. இங்ஙனம் ஒருரைக்குப் பின் கூட்டியும் குறைத்தும் பிற்காலத்தார் விளக்கி எழுதியுள்ள உரைகளை வடமொழியிற் பரக்கக் காணலாம். இலக்கணக் கொத்து முதலிய மூன்றையும் முறையே படித்த பின்பு பாடங்கேட்டால்தான் விருத்தி

யுரை நன்கு புலப்படும். இங்கு இவ்வுரையைப் பாடங் கேட்கும் முறை இதுவேயாம்."

**சுவாமிகளது மாணவர்**

" ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகளது மாணவர் பன்னிருவர் என்ப. இலக்கணம்—சிதம்பரநாத முனிவர், கவிராக்ஷஸ — கச்சியப்ப முனிவரர், மதுரகவி — தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சரவண பத்தர், இராமநாதபுரம்—சோமசுந்தரம் பிள்ளை, காஞ்சிபுரம் — சிதம்பர முனிவர் முதலியோர். ஏனையோர் பெயர் தெரியவில்லை." பலர் பலவாறாகக் கூறுவர்.

இனி, சின்னப்பட்டத்திலிருந்த பேரூர் — வேலப்ப தேசிகர் தமது ஞானாசிரியரிடத்துப் பிரியாவிடை பெற்றுச் சிவதல யாத்திரை செய்துகொண்டு திருப்பேரூரை யடைந்து அங்கே சில காலம் வசித்திருந்தனர். இங்ஙனம் சிவதரிசனம் செய்துகொண்டும் தம்மை யடுத்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்துகொண்டும் இருந்த காலத்திலே பேரூரிலே வேலப்ப தேசிகர் ஓர் ஆனி மாதத்துப் பரணி நட்சத்திரத்திலே சிவபரிபூரண முற்றனர். பின்பு, ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் முதலியோர் திருவாவடுதுறையை யடைந்து அங்கே வசித்து வரலாயினர்.

பின்பு, சின்னப்பட்டத்திலிருந்த பேரூர்—வேலப்ப தேசிகர் சிவபரிபூரண முற்றமையறிந்த ஞான தேசிகர் தமது அடியவர்களாகிய தம்பிரான் சுவாமிகள் பலரினுஞ் சிறந்து விளங்கும் மற்றொரு வேலப்பத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து சின்னப் பட்டத்திலிருத்தி, வேலப்ப தேசிகர் என்னும் திருநாமத்தையே அவருக்கும் சாத்தினர். பின்பு ஞானாசிரியர்

சிவதல யாத்திரை செய்யத் திருவுள்ளங்கொண்டு ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டே சங்கரநாராயணர் கோயிலையடைந்து அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார்கள். அக்காலத்துப் பலருக்குக் குட்டம் முதலிய நோய்களைத் தீர்த்தருளியதுமன்றித் தமது மகிமைகளை யறிந்து வந்து வணங்கிக் குறையிரந்த செவ்வல் — குறுநில மன்னராகிய சிவஞான பூலித்தேவர் என்பவருக்குக் குன்ம நோயையும் போக்கியருளினார்கள். இவ்வாறு பலருக்கும் அனுக்கிரகம் செய்துகொண்டு சிவஞான பூரணராய் எழுந்தருளியிருந்த முன் வேலப்ப தேசிக மூர்த்திகள் அத்திருப்பதியிலே ஓர் புரட்டாசி மாதத்திலே மூல நட்சத்திரத்திலே சிவபரிபூரணம் எய்தியருளினார்கள்.

## 11. பின் வேலப்ப தேசிகர்

தமது ஞான குரவராகிய முன் வேலப்ப தேசிக மூர்த்திகள் சங்கரநாராயணர் கோயிலில் சிவபரிபூரண முற்ற பின் பத்து நாட் குருபூசையும் சிறப்புற நடாத்திப் பின் வேலப்ப தேசிகர் ஞானபீடத்தி லெழுந்தருளித் தமது அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்து வருவாராயினர்.

சில நாட்கள் சென்றபின்பு தமது அடியார்களுட் சிறந்த திருச்சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகளுக்கு ஆசாரியாபிடேகம் செய்து சின்னப்பட்டத்தி லமர்த்தினார். சின்னப்பட்டத்தி லமர்ந்த திருச்சிற்றம்பல தேசிகர் தம்மையடைந்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்துகொண்டு சிறப்புடன் விளங்கினார். பெரியபட்டத்தி லெழுந்தருளியிருந்த பின் வேலப்ப தேசிக சுவாமிகள் திருப்பறியலூர்ப் புராணத்தை இயற்றியருளினர். இங்ஙனமாக, தம்மையடைந்த பக்குவர்கட்கு உயிர்ப் பிணியைப் போக்கியும், தம்மை வழிபட்டுச் சரணை அடைந்தோர்க்குள்ள உடல்நோய்களை யகற்றியும் வீற்றிருந்த

ஞான குரவராகிய பின் வேலப்ப தேசிகர் தமது அடியார்களுடன் சிவதல யாத்திரை செய்துகொண்டு திருப்பெருந்துறை யென்னும் ஆளுடையார் கோயிலை யடைந்து வழிபாடு செய்துகொண்டிருக்கும் காலத்திலே ஓர் வைகாசி மாதம் பூரட்டாதி நாளிலே சிவபரிபூரண முற்றருளினர். பின்பு சின்னப்பட்டத்தி லெழுந்தருளியிருந்த திருச்சிற்றம்பல தேசிகர் பத்து நாட் குருபூசையும் நன்ருக நடாத்தி ஞான பீடத்தி லெழுந்தருளி அடியார்கட்கு அனுக்கிரகம் செய்து வருவாராயினர்.

" திருக்கடவூரிலே அவதரித்தருளிய உய்யவந்த தேவநாயனர் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளியிருந்த பொழுது, தம்முடைய ஆசிரியராகிய திருவியலூர் ஆளவந்த தேவ நாயனர் தமக்கருளிச் செய்த திருவுந்தியார் என்னும் சைவசித்தாந்த சாத்திரத்தை விரித்துத் தம்மை அடைந்த ஓர் அதிபக்குவர் பொருட்டு ஒரு சைவசித்தாந்த சாத்திரத்தை அருளிச் செய்து, அதன் பெருமையை உலகத்துள்ளாரும் உணர்ந்துய்யுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற் சென்று வணங்கித் திருக்களிற்றுப்படியிலே அந்நூலை வைக்குமளவில், அத் திருக்களிற்றுக்கை நிமிர்ந்து அதனை வாங்கிப் பரம கருணுநிதியாகிய நடராசப் பெருமானது திருவடியிலே கொடுத்தமையால், அத் திருப்படை வீட்டினுள்ள எழுநூறு திருமடத்து முதலிகளும், தில்லை வாழந்தணர் மூவாயிரவரும், மாகேசுரர் நாற்பத்தெண்ணுயிரவரும், திருக்கோயிற் றிருத்தொண்டு செய்யுந் திருப்பேர் ஏழாயிரத்துத் தொளாயிரவரும், பிறரும் சந்நிதியிலே கூடிநின்று வியப்புற்று அந்நூற்குத் திருக்களிற்றுப் படியார் எனத் திருநாமஞ் சாத்தினர்கள். ஆகலான் மேற்கூறிய திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டும், மெய்கண்ட தேவர் அருளிச்

மெய்கண்ட சாத்திரம்

செய்த சிவஞான போதம் ஒன்றும், அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்த சிவஞான சித்தியார்—இருபா இருபது ஆகிய இரண்டும், மனவாசங் கடந்தார் அருளிச் செய்த உண்மை விளக்கம் ஒன்றும், உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த சிவப்பிரகாசம்—திருவருட்பயன்—வினு வெண்பா—போற்றிப்பஃறொடை—கொடிக்கவி – நெஞ்சு விடுதூது — உண்மை நெறி விளக்கம் — சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டும் ஆகப் பதினன்கு சைவசித்தாந்த சாத்திரங்களும் மெய்கண்ட சாத்திரம் என அடிப்பட்ட சான்ருேரால் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை,

"உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்னும் வெண்பாவால் அறிக. இனி, ஸ்ரீ மெய்கண்டதேவர் அருளிய நூலின் தன்மையைக் காட்டும் பாட்டு வருமாறு:—

"வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதும் திருப்பாட்டே உள்ளூறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்
செய்ததமிழ் நூலின் திறம். என்பது" [கண்டான்

இவர்கள் தொண்டை நாட்டிலேயுள்ள திருத்தணிகையில் தொண்டை மண்டல வேளாளர் மரபில் பிறந்தவர்கள். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மாணவர் பன்னிருவருள் முதல்வர். விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்னும் இரும்பெரும் புலவருடைய தந்தையாராகிய கந்தப்பையருக்கு ஆசிரியர்.

கவிபாடும் வன்மையால் கவிஞர் பெருமான் என்றும், மகா வித்துவான் என்றும், கவிச் சக்கரவர்த்தி என்றும், கவிராக்ஷஸர் என்றும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கியவர். இவர்கள் பல சிவதலங்களுக்கும் சென்று சிவ தல தரிசனம் செய்து கொண்டு அங்கங்குள்ள மக்கட்குத் தமிழறிவும், சைவசமய நூற்பயிற்சியும் செய்வித்தார். அறிஞர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றவர். செல்வமும் செல்வாக்கும் உள்ளவர். கம்பீரமும் வாக்குச் சாதுரியமும் உடையவர். காலம் இடம் நிகழ்ச்சி முறைகட்கு இயைய நடந்து கொள்ளும் பேராற்றலும் படைத்தவர். மந்திர சித்தியும் சிவானுபவமும் கைவரப் பெற்றவர். ஆசாரியரிடத்துப் பேரன்பும் பெருமதிப்பும் மிக்கவர். வடமொழியிலும் நல்ல பயிற்சிபெற்றவர். நெட்டுருப் பண்ணிய பழைய பாட்டுக்களை ஒப்பிப்பது போலப் புதிய செய்யுட்களை இயற்றியருளுவர் என்பர்.

**கவிராக்ஷஸ**

**ஸ்ரீ கச்சியப்ப முனிவர்**

**அருளிய நூல்கள்**

பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம், திருவானைக்காப் புராணம், காஞ்சிப் புராணத்து இரண்டாங் காண்டம், திருத்தணிகைப் புராணம், திருத்தணிகையாற்றுப் படை, திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி; பெருநகர்ப் பிரமீசர் பதிற்றுப் பத்தந்தாதி, ஸ்ரீ ஆனந்தருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி, ஆனந்தருத்திரேசர் கழி நெடில், பஞ்சாக்கர தேசிகரந்தாதி என்பன ஸ்ரீ கச்சியப்ப முனிவர் அருளிச் செய்த நூல்கள்.

இவற்றுள் தணிகையாற்றுப் படையைப் பாடித் தம்மாணவருட் சிறந்த கந்தப்பையருக்குண்டான குன்ம

நோயை மாற்றியருளினூர். பேரூரில் வசித்தபோது பட்டீசர்மீது பல பதிகங்கள் பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியவற்றைப் போக்கியருளினர். அரசம்பலவாணர்மீது ஒரு பிரபந்தம் பாடி மழை பொழிவித்தார்.

**தெய்வீகம்**

விநாயக புராணம் பாடிச் சென்னையில் உள்ள பிரசன்ன விநாயகர் சந்நிதியில் அரங்கேற்றியருளினர். அப்போது அங்கே பாதகாணிக்கையாகக் கிடைத்த இரண்டாயிரம் வராகனையும் கொண்டுவந்து ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தியின் அர்த்தமண்டப மகாமண்டபத் திருப்பணிகள் செய்வித்தனர். அம்மகாமண்டபத்தின் தென்புறத்தில் ஸ்ரீ கச்சியப்ப முனிவரின் திருவுருவம் சிறிதாகச் செதுக்கப்பட்டுள்ளமை இன்றும் காணலாம்.

**திருப்பணி**

ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் சிதம்பரத்தைச் சார்ந்த காட்டுமன்னூர் கோயிலிலே, கார்காத்த வேளாள குலத்திலே, பூநொடையார் கோத்திரத்திற் பிறந்தவர். ஸ்ரீ முருகக்கடவுளை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர். இவரும் பாடியகாரர் ஆகிய ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகளின் மாணுக்கர்களுள் ஒருவர். இவர் செய்யும் கவிதைகளின் இனிமையால் மதுரகவி எனச் சிறப்புப் பெயர் பெற்ருர். இவர் தொண்டை நாட்டிலேயுள்ள தொட்டிக்கலையில் நெடு நாள் வசித்திருந்து சிதம்பரேசர் திருக்கோவில் சந்நிதி மண்டபத்தில் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளது திருவுருவம் அமைப்பித்து நாடோறும் வழிபட்டு வந்தார். இவரைத் தொட்டிக்கலை—கேசவ முதலியார், வேதாசல முதலியார் ஆகிய இருவரும் ஆதரித்து வந்தனர்.

**மதுரகவி ஸ்ரீசுப்பிரமணிய முனிவர்**

திருவாவடுதுறைக் கோவை, திருக்கலைசைக் கோவை, திருக்கலைசைச் சிலேடை வெண்பா, திருக்கலைசைச் சிதம்பரேசர் சந்நிதி முறை, திருக்கலைசைச் சிதம்பரேசர் வண்ணம், திருக்கலைசைச் சிதம்பரேசர் பஞ்சரத்தினம், திருக்கலைசைச் சிவகாமியம்மை பஞ்சரத்தினம், திருக்கலைசைச் சிதம்பரேசர் கட்டியம், திருக்குற்றாலச் சித்திரசபைத் திருவிருத்தம், பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்னமாலை, ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம், வட திருமுல்லை வாயிற் கொடியிடை யம்மை பிள்ளைத்தமிழ், திருச்செந்திற் சந்தவிருத்தம், ஆவினன்குடிக் கயிலாசநாதர்பதிற்றுப்பத்தந்தாதி, திருமாளிகைத் தேவர் விருத்தங்கள், திருச்சிற்றம்பல தேசிகர் சிந்து, திருச்சிற்றம்பல தேசிகர் சந்தவிருத்தம், அம்பலவாண தேசிகர் வண்ணம், அம்பலவாண தேசிகர் ஆனந்தக்களிப்பு, திருவாவடுதுறை ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் கட்டியம், இலக்குமி தோத்திரப் பதிகம், திராவிட மாபாடியக்காரர் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் துதி விருத்தங்கள், கீர்த்தனை முதலியன. குலசையுலாவும் இவர் பாடியதெனக் கூறுப.

**இவரியற்றிய நூல்கள்**

ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர், ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளுக்குப் பின் பன்னிரண்டாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளி யிருந்தவர்கள். இத்தேசிக மூர்த்திகள் எப்பொழுதும் சிவாகம ஆராய்ச்சியையே தமக்குப் பொழுது போக்காகக் கொண்டவர்கள். சிவஞானமும் தவவொழுக்கமும் மிக்கவர்கள். இவர்கள் சிவாகமத்திலே இரண்டு லக்ஷம் கிரந்தம் ஆராய்ந்து அறிந்தவர்கள்.

**12. திருச்சிற்றம்பல தேசிகர்**

இனி, ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மாணவர் பன்னிருவரில் இலக்கணம்—ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் இக் குருமகா சந்நிதானத்தினிடத்திலே சிவஞானோபதேசமும் சைவ சந்நியாசமும் பெற்றுக் கொண்டார். மற்றொரு மாணவர் இராமநாதபுரம் ஸ்ரீ சோமசுந்தர குருவும் இக் குரவரிடத்திலேதான் நிருவாண தீக்ஷையும் சிவஞானோபதேசமும் பெற்றனர். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள், ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனா ரருளிச்செய்த சிவஞான போதத்துக்கு திராவிட மாபாடியம் அருளிச் செய்து தமது ஆசிரிய மூர்த்திகளாகிய 11-வது ஸ்ரீ பின் வேலப்ப தேசிகர் பெரிய பட்டத்திலும் 12-வது திருச் சிற்றம்பல தேசிகர் சின்னப் பட்டத்திலும் எழுந்தருளி யிருந்த காலத்திலே அவ்விரு குருமூர்த்திகள் திருமுன்பு கூடியிருந்த வித்துவ மகாசபையிலே அரங்கேற்றியருளி னார்கள். ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகளுடைய முதல் மாணவராக வீற்றிருந்தருளிய கவிராக்ஷஸ — ஸ்ரீ கச்சி யப்ப முனிவரர், மதுரகவி தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் ஆகிய இவ்விருவரும் திருச்சிற்றம்பல தேசிகர் பெரியபட்டத்தில் எழுந்தருளியிருந்து சிவாகம ஆராய்ச்சி யையே பொழுது போக்காகக் கொண்டு சிவானந்த நிட்டையிலிருந்த காலத்து அவருடைய கட்டளையின்படி அப்போது சின்னப்பட்டத்திலே எழுந்தருளியுள்ள ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடத்திலே சிவஞானோபதேசமும் சைவ சந்நியாசமும் பெற்றனர்.

இனி, ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் செங் கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் அருளிச்செய்து அரங் கேற்றிய காலம் கி. பி. 1772. ஸ்ரீ சுவாமிகள் சிவபரி பூரணமுற்றது (கி. பி. 1785) விசுவாவசு—சித்திரை ஆயி லியநாள். ஸ்ரீ கவிராக்ஷஸ கச்சியப்ப முனிவர் சிவபரி பூரணமுற்ற காலம் (கி. பி. 1790) சாதாரண—சித்திரை

—புனர்பூச நட்சத்திரம். மதுரகவி—தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் ஆவினன் குடிப்பதிற்றுப் பத்தந்தாதி அரங்கேற்றிய காலம் (கி. பி. 1789) கீலக வருஷம் தை-மீ ஆம்.

இனி, இத்திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் தென்னாட்டு யாத்திரை செய்த காலத்து இராமேச்சுரம் சென்று தரிசித்து இராமநாதபுரத்திலே வந்து எழுந்தருளியிருந்தார்கள். அப்போது இராமநாதபுரம் சமஸ்தானத்திலே கௌரவம் பொருந்திய மகாராஜராஜ ஸ்ரீ சேதுபதியரசருக்கு மதிமந்திரியாகவுள்ள ஒருவர் நமது ஆதீனத்துச் சீடவர்க்கத்தினர். அவர் ஸ்ரீ மகா சந்நிதானம் சேதுநாட்டில் எழுந்தருளியிருக்கும் செய்தியை மகாராஜாவுக்குத் தெரிவித்தார். அப்போது

**தென்னாட்டு யாத்திரை**

**சிவானந்தை நிட்டை**

மகாராஜா அவர்கள் "உம்முடைய ஆசிரியராகிய மகாசந்நிதானம் இங்கெழுந்தருளியிருப்பது நல்லதே. ஆயினும் பல ஆண்டுகளாக மழையின்றி இந்நாடு வற்கடத்தால் வாடுவதைத் தவிர்க்க முடியுமாயின் நாம் திருவாவடுதுறை யாதீனத்துக்குக் கொத்தடிமை குல அடிமையாவோம். இதனை, சமயமறிந்து சந்நிதானத்தில் விண்ணப்பிக்க" என அமைச்சருக்கு அறிவுறுத்தினர். மேலும், அமைச்சருடன் அரசரும் காணிக்கைப்பொருள் கைக்கொண்டு குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்க எழுந்தருளினர். மகாசந்நிதானத்துடன் மகாராஜா அவர்கள் அளவளாவியிருக்கும்போது மதியமைச்சர் மன்னருடைய மனக்குறையை விண்ணப்பித்தனர். குருமூர்த்திகள் மதியமைச்சருடைய வேண்டுகோளைத் திருவுளத்துக் கொண்டு அரசரைப் பார்த்து அவ்வாறே, 'ஸ்ரீ ஞானமா நடராசர் திருவருள் செய்வார்' என அருளினர். உடனே

அரசர் ஆணைப்படி விசேட அபிடேக ஆராதனைகளுக் குரிய பொருள்கள் சேகரிக்கப்பட்டன. நமது ஞான தேசிகர் ஞானமா நடராச மூர்த்திக்குச் சிறப்பாகப் பூசை செய்து முடித்துத் தேவாரத் திருப்பதிகங்களில் மேகராகக் குறிஞ்சிப் பண்களைப் பாடப்பணித்துத் தாம் பஞ்சாக்கார செபத்துடன் சிவானந்த நிட்டையில் நெடு நேரம் இருந்து விட்டனர். மேகங்கள் நல்ல மழை பொழிந்தன. மன்னர்பிரான் மகிழ்ந்து ஆசாரியரைத் தரிசித்து வணங்கி மாகேசுரபூஜை சிறப்புற நடத்திச் சபாபதி பூஜையின் பொருட்டும், குருபூஜை மாகேசுர பூஜைகளின் பொருட்டும் சர்வமானிய கிராமங்கள் விட்டுக் கொடுத்துச் செப்புப் பட்டயங்களும் தந்தனர்.

கலம்பகம் ஒன்று இயற்றித் திருச்சிற்றம்பல தேசிகர் திருவடிகட்கு அணிகலமாக அணிந்தவர் சீனிப் புலவர் என்னும் புலவர் பெருமான். இவர் பரம்பரை யிலேயே சிறந்த புலவர் குலத்திலே தோன்றியவர்.

**சீனிப் புலவர்**

திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகளிடத்திலே சிவஞான உபதேசமும், நிருவாண தீக்ஷையும் பெற்றுச் சிவபூசையை விதிவழாமல் செய்து வந்தவர். திருவாவடுதுறை யாதீனத்திலே மிக ஈடுபா டுடையவர். தமது ஞானாசாரியரைப் பலபடியாகக் கலம்பகத்திலே உண்மையாகப் பாராட்டுகிறார். இவர் பரம்பரைச் சைவ வேளாளர். இவரேயன்றி இவருடன் பிறந்தாரும் முன்னோரும் பின்னோரும் இத் திருவாவடு துறை யாதீனத்திலேயே கல்வி கற்றுச் சிறந்து அறி வொழுக்க முடையவர்களாகத் திகழ்ந்தனர். ஆதீன வித்துவான்களாக விருந்து ஆதீனத்தின் புகழைப் பல்லாற்றானும் பரவச்செய்தனர்.

இனி,

"உரைதருவே தாந்தசூ டாமணியுட் பொருளை
யுலகிலுள்ளோ ருணரவுரை செய்கவெனக் கடல்சூழ்
தரையரசன் சேதுபதி யமாத்தியனுந் தாமோ
தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற
வகுத்தனனற் றுறைசைநமச் சிவாயதே சிகன்றாள்
பரவுசிவக் கொழுந்துநிதி யருள்கல்விக் கடலைப்
பருகுமுகில் சர்க்கரைநற் பாவலவர் கோனே."

" என்னும் இவ்வுரைப் பாயிரம் இராமநாத புரத்தி லிருக்கின்ற நெல்லையப்ப பிள்ளையவர்கள் குமாரர் எம் மோடு கற்றோராகிய சாமிநாத பிள்ளையவர்கள் பாடியது" என வேதாந்த சூடாமணியுரை யேட்டிற் காணப்படுவ தென்பர்.

இனி, வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரம் இயற்றிய சாமிநாத பிள்ளை என்னும் சாமிநாத கவிரா யர் திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவ ஞான சுவாமிகளுடைய மாணவர்களுள் ஒருவராகிய இராமநாதபுரம்—சோமசுந்தர குருவின் சகோதரர் ஆவார், இவர்கள் இராமநாதபுரம் சமஸ்தான வித்து வான்கள். இவர்கள் தந்தையார் முற்கூறிய நெல்லை யப்ப பிள்ளை என்பவர்.

இக் குருமூர்த்திகளுடைய சீடராகிய ஸ்ரீ சுந்தர லிங்க முனிவர் என்பவர் 2080 செய்யுட்கள் உள்ள ஆதி கைலாச மான்மியம் என்னும் திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றியருளினர்.

இனி, திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் சேது வேந்தர் வேண்டுகோளுக் கிணங்கிச் சிவானந்த நிட்டையி லிருக்கும் போது சொல்லிய பாடல் வருமாறு :—

" சைவ சமயஞ் சமயமெனின் அச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனின்—ஐவரை வென்(று)
ஆனந்த இன்பில் அழுந்துவது முத்தியெனின்
வானங்காள் பெய்ம்மின் மழை." என்பது.

மழை பெய்து தம்நாடு வளம் பெற்றதற்கு உவந்து பொற்கோட்டை என்னும் ஊரைச் சேதுவேந்தர் இத்திருவாவடுதுறை ஆதீன மடத்துக்கு முற்றூட்டாக அளித்தபோது ஞான தேசிகர் மகிழ்ந்து சொல்லிய பாட்டு இது:—

" நதியாம் விரிசிலை நன்னகர்பொற் கோட்டை
பதியாந் துறைசைப் பதிக்கு—விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஊனமிலை யெந்நா ளும்." என்பது.

இதனைக் கருதியே இவ்வாதீனத்தில் 'சேதுபதியன்னமும் காவிரிநீரும் ஆவுடையப்பர் நீழலும்' எனக்கூறும் பழமொழி யெழுந்தது. இப்பாடல்கள் இரண்டையும் இராமநாதபுரம் வித்வான், உப. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் தொகுத்துதவிய 'பெருந்தொகை' நூலிலே குறிப்பிட்டிருத்தலுங் கருதத்தக்கது.

இனி, பவானிகூடற் புராண ஆசிரியர் வாசுதேவ முதலியார் குருவணக்கங் கூறுமிடத்து இந்த ஞான தேசிகருக்கு வணக்கம் கூறியிருத்தலால் அவரும் இவருடைய மாணவர்களுள் ஒருவரெனக் கருதப்படுகிறது.

இவ்வாதீனத்து வழக்க வொழுக்க விழுப்பங்களையும், சம்பிரதாயங்களையும், கலம்பக முகமாகச் சினிப்புலவர் அங்கங்கே எடுத்துப் பாராட்டுகின்றார். தமக்கு வித்தியாகுருவாகவும் ஞானாசிரியராகவும் உள்ள திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகளுடைய உண்மையான இயல்புகளனைத்தையும் இடந்தொறும் இடந்தொறும் கூறித் தம் நாவிலுள்ள தினவைத் தீர்க்கக் கருதுகின்றார். புலவருக்கு அத்தினவு தீர்ந்ததாக ஒருவாற்றானும் புலப்படவில்லை.

**இராமநாதபுரம் சோமசுந்தர குரு**

இவர் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மாணவருள் ஒருவர். இவர் இராமநாதபுரத்தினர். அதனால் இவரை இராமநாதபுரம் சோமசுந்தர குரு எனவுங் கூறுவர். இவர் மாணவர்கள் அட்டாவதானி — பெரிய சரவணக் கவிராயர், முகவை இயற்றமிழாசிரியர்—இராமநுச கவிராயர் முதலியோர். இராமாநுச கவிராயர் மாணவர் சரவணப் பெருமாளையர், விசாகப் பெருமாளையர், களத்தூர் வேதகிரி முதலியார் என்பவர்கள். இயற்றமிழாசிரியர்—விசாகப் பெருமாளையர் மாணவர் மழவை—மகாலிங்க ஐயர் முதலியோர். சரவணப் பெருமாளையர், விசாகப் பெருமாளையர் இருவரும் திருத்தணிகைக் கந்தப்பையருடைய குமாரர்கள். கந்தப்பையர் கவிராக்ஷஸ — ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் மாணவர். தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவர் சரவணப் பெருமாளையர்—விசாகப் பெருமாளையர் என்பவர்களிடம் முறையாகப் பாடங்கேட்டு நல்ல பயிற்சி பெற்றவர். சோமசுந்தர குரு இயற்றிய நூல்கள் திருக்கழுக்குன்றக் கோவை, பர்வதவர்த்தனி மாலை முதலியன.

காஞ்சீபுரம்—சிதம்பர முனிவர் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழும், காமாக்ஷியம்மை பிள்ளைத் தமிழும் இயற்றியுள்ளார்.

இலக்கணம் — சிதம்பரநாத முனிவர் திருப் பாதிரிப்புலியூர்ப் புராணம் இயற்றினார்.

திருச்சிற்றம்பல தேசிகர் தம்முடைய அடியவர் களுட் சிறந்த அம்பலவாண தம்பிரானுக்கு ஆசாரியாபி டேகம் செய்து அம்பலவாண தேசிகர் என்னும் தீட்சா நாமமும் அருளிச் சின்னப்பட்டத்திலே இருத்தினார்.

**சின்னப்பட்டம்**

**அம்பலவாண தேசிகர்**

அம்பலவாண தேசிகர் ஞானாசிரியரது ஆணைப்படி சுசீந்திரத்தி லெழுந்தருளியிருந்து கொண்டு தம்மை யடுத்த பக்குவர்கட்குச் சிவஞானோபதேசம் செய்து மெய்கண்ட நூல்களும் உப தேசித்து வருவாராயினர். இந்த அம்பலவாண தேசிகர் பாண்டிவள நாட்டிலே யுள்ள கடைய நல்லூரிலே தோன்றியவர்கள். பரம்பரைச் சைவவேளாளர்.

பின்பு, கல்லிடைக்குறிச்சியிலுள்ள பிரபுக்கள் வேண்டுகோளின்படி திருத்தளிச்சேரிக்கு இவர் எழுந் தருளி அங்கேயிருந்துகொண்டு சீடர்களுக்குத் தீட்சை செய்து சித்தாந்தோபதேசமும் செய்து வந்தனர். இவர்கள் காலத்திலேதான் சுசீந்திரத்திலுள்ள சின்னப்பட்டத் துக்குரிய இடம் திருத்தளிச்சேரிக்கு மாற்றப்பட்டது. பின்னர் தமது ஞானாசிரியரைத் தரிசிக்க எண்ணித் திருவாவடுதுறையை அடைந்து அங்கே ஞானகுரவரைப் பிரியாதிருந்தனர். இவ்வாறாக, திருச்சிற்றம்பல தேசிகர் திருவாவடுதுறையிலே ஓர் ஆனிமாதத்துப் பரணி நட்சத் திரத்திலே சிவபரிபூரணமாயினர்.

ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் தமது ஞான குரவராகிய திருச்சிற்றம்பலதேசிகர் சிவபரிபூரண மானவுடன் குருபூசையைப் பத்து நாட்களிலும் சிறப்பாகச் செய்து தாம் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்தார். பின்பு தம் அடியவர்களுட் சிறந்த சுப்பிரமணியத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து சுப்பிரமணிய தேசிகர் என்னும் பெயருடன் தமக்கு இரண்டாங் குரவராக வைத்தருளினார். தாம் சிவதல யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு சின்னப்பட்டத்துச் சுப்பிரமணிய தேசிகரும் அடியார்களும் உடன்வரப் பாண்டி நாட்டையடைந்தார். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை அங்கேயிருந்து கொண்டு சீடர்களுக்குத் தீட்சை முதலியன செய்து வருமாறு பணித்துப் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறைக்கு எழுந்தருளியிருந்து தம்மையடைந்த பக்குவர்கட்கு ஞானதேசிகர் அனுக்கிரகம் செய்திருந்தார். சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பன்னிரண்டாவது குரவர் திருச்சிற்றம்பல தேசிகரிடத்தே மூவகைத் தீட்சையும் சைவ சந்நியாசமும் சிவஞானோபதேசமும் பெற்றவர். ஸ்ரீ அம்பலவாண தேசிகர் திருவாவடுதுறையிலே ஓர் மார்கழி மாதத்துக் கேட்டை நட்சத்திரத்திலே சிவபரிபூரண மடைந்தருளினார். (கி.பி. 1790)

## 13. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திக்குப் பின் பதின்மூன்றுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளால் பதினொன்காவது பட்டத்திலே வேளூர்— ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நியமிக்கப் பெற்றவர்கள். இவர்கள் புள்ளிருக்கு வேளூர் என்னும் வயித்தீசுவரன் கோயிலிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே

**14. வேளூர்—**

**ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்**

தோன்றியவர்கள். இளமைப் பருவத்திலேயே இவ்வாதீனத்தை அடுத்துக் கல்வி பயின்றவர்கள். இவர்கள் துறவறவொழுக்கத்திலே தலைசிறந்தவர்கள். இருவகைத் தீட்சையும் முறையே பெற்றுச் சைவ சந்நியாசமும் பெற்றவர்கள். வடமொழி தென்மொழி நூல்களில் வல்லவர்; சிவாகமங்களில் தேர்ந்தவர்: மெய்கண்ட சாஸ்திரங்களிலும், பண்டார சாஸ்திரங்களிலும் பயிற்சி மிக்கவர்; சித்த நூல்களிலும் கைவந்தவர்; பரம்பரையே பாடங் கேட்டவர்; பாடஞ் சொல்லுதலில் மிக்க ஆற்றலுடையவர்; பிரசங்க சக்தி வாய்ந்தவர்; வடமொழி வித்துவான்கள் தென்மொழி வாணர்கள் பலர் இடையே இருந்து நாடோறும் அவர்களுடன் 'சல்லாபம் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு காலங் கழிப்பவர். இவர்கள் அப்பொழுதப்பொழுது சமயோசிதமாகப் பேசிவந்த வார்த்தைகளும், சிலேடையான மொழிகளும், வாக்கியங்களும் இன்றும் அங்கங்கே பலரால் மிகவும் பாராட்டி வழங்கப்படுகின்றன. இவ்வாதீனத்தில் இப்பொழுது பலவகையாக எழுதப்படும் திருமுக சம்பிரதாயங்களும், கடித வக்கணைகளும், உள்ள சட்டதிட்டங்களும் இவர்களால் புதுப்பிக்கப்பட்டனவே என்பர். இவர்களுக்குப் பட்டமாவதற்கு முந்திய வருஷத்தில் கவிராக்ஷஸ— ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகளால் நன்கு படித்துவரும்படி செவியறிவுறுத்தப் பெற்றவர்.

இக் குரவர் சிகாமணி காலத்திலே ஆதீன வித்துவான்களாகச் சிறந்திருந்தவர்கள் — கந்தசாமிக் கவிராயர், சரவண ஓதுவார் முதலியோரும் வேறு சிலரும் ஆவர். கந்தசாமிக் கவிராயர் திருவாவடுதுறையினர். நல்ல கல்வி யறிவுள்ளவர். இவர் உடையார்பாளையத்திலே ஜமீந்தாரராக இருந்த கச்சிக் கல்யாண ரங்கதுரை

**ஆதீன வித்துவான்கள்**

என்பவர்மீது ஒருகோவை பாடிப் பரிசும் சர்வமானியமாகப்பத்துக் காணி நிலமும் பெற்றவர். சரவண ஓதுவார் என்பவர் ஆதீன ஓதுவார்களில் தலைசிறந்த புலமை பெற்றவர். இவர் பிற்காலத்திலே ஆதீனத் தலைவர்களுடைய கட்டளையின்படி கோயம்புத்தூரை யடைந்து அங்கே யுள்ள பிரபுக்களாலும் வித்துவான்களாலும் ஆதரிக்கப் பெற்றுப் பலருக்குப் பாடஞ் சொல்லிப் புகழ் பெற்றவர்.

தமிழிலே சைவ வைணவ சமயச்சார்பான கருவி நூல் படிப்பவர்களும் கந்த புராணம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்கள், திருமுறை முதலியவைகள், தலபுராணங்கள், சைவ சித்தாந்த நூல்கள் முதலியவற்றைப் பாடங் கேட்பவர்களும் பலர் இருந்து

**சந்நிதானத்தின் காலப்போக்கும்—ஆதீனத்தில் கல்விப் பயிற்சியும்**

வந்தனர். உணவிற்குரிய பண்டங்களை மடத்திலிருந்து பெற்றுக் கொண்டு திருவாலங்காடு, திருக்கோடிகா, பாஸ்கரராசபுரம், குற்றலம் முதலிய ஊர்களிலுள்ள வடமொழி வித்துவான்களிடம் சென்று படித்துவந்த அந்தண மாணவர்களும் பலர் இருந்தனர். உக்கிராணம், களஞ்சியம், பந்திக்கட்டு, பண்ணை முதலிய எல்லா இடங்களிலும் விசாரணை வேலைகளில் தம்பிரான் சுவாமிகளே அதிகாரிகளாக இருந்து பக்தி சிரத்தையோடும் நம்பிக்கையோடும் தங்களுக்குக் கிடைத்த பணியையே நன்கு ஆற்றிவந்தார்கள். அவர்களுட் பலர் கல்விமான்கள், அதனால், தலைவர்கள் தம்முடைய நேரத்திற் பெரும்பான்மையான பாகத்தைப் படிப்பு சம்பந்தமாகவே செலுத்தி இன்புற்று வந்தார்கள். பொதுவாக இந்த ஆதீனம் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரியாகவே திகழ்ந்து மேம்பட்டது என்பது மிகையாகாது. தமிழ்

இலக்கண இலக்கியப் பயிற்சிகளால் தமிழ்க் கல்லூரியும், வடமொழி வாணர் பயிலும் இடமாகவே சம்ஸ்கிருதக் கல்லூரியும், இசைப் பயிற்சிகள் இங்குளவாகலின் இசைக் கல்லூரியும், பிரசங்க ஆற்றல்—பாடஞ்சொல் லும் ஆற்றல் முதலியவைகளையும் உண்டு பண்ணிச் சிறப்புச் செய்வதால் பயிற்சிக் கல்லூரியும் தொகுப்பாக அமைந்த இடமாக விளங்கியது இத் துறைசை யாதீனம். அவ்வத்துறையிலே வல்லுநர்களைக் கொண்டு பரீட்சித் துப் பட்டமும் பரிசும் வழங்கித் தமிழ் மக்களை ஆதீனம் ஊக்கி வந்தது. மாணவர்கட்கு உண்டி, உடை, உறையுள், கல்வி, நல்லொழுக்கப் பயிற்சி, சாஸ்திரப் பயிற்சி முதலியவைகளும் இங்கே கிடைத்தன. தமிழுலகத்துக்கு நன்மை பயப்பித்தது: நாட்டிலே நல்ல புகழைப் பெற்றது இவ்வாதீனம்.

வேளூர்—ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 'எண்பது திரு நட்சத்திரப் பண்டார சந்நிதிகள்' என்று வழங்கப் பெறுவர். இவர்கள் கி. பி. 1790—1845 வரை ஐம்பத் தைந்து ஆண்டுகள் பட்டத்திலிருந்தார்கள்.

**சின்னப்பட்டம்**

**கனகசபாபதி தேசிகர்**

இவர் தொண்டை நாட்டிலே திருமாகறல் என் னும் ஊரிலே தோன்றியவர். இளமையிலே துறவின் மேல் விருப்புடையராய் இவ்வாதீனத்தை யடைந்து மூவகைத் தீட்சையும், சைவ சந்நியாசமும், சித்தாந்த சாஸ்தி ரோபதேசமும் பெற்றனர். வேளூர் — சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து இரண்டாங் குரவ ராக வைத்தருளினர். ஞானாசிரியர் கட்டளைப்படி சீடர்களுக்குத் தீட்சை முதலியன செய்து கொண்டிருக் குங்காலத்திலே திருத்தளிச் சேரியிலே ஓர் தைமாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்திலே சிவபரிபூரண மடைந்தார்.

அதன் பின்பு, ஞான தேசிகர் தமது அடியார்களுட் சிறந்த சுப்பிரமணியத் தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் செய்து சின்னப் பட்டத்திலிருக்கச்செய்தார்.

சின்னப்பட்டம்

சுப்பிரமணிய தேசிகர்

இவர் பாண்டிவள நாட்டிலுள்ள இராசவல்லிபுரத்திலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே தோன்றியவர். சிறந்த கல்வி கேள்வியுடையவர். வழக்கம் போலவே இவரையும் திருத்தளிச்சேரியில் இருத்திச் சீடர்களுக்கு அனுக்கிரகம் செய்து வருமாறு கட்டளையிட்டார்.

தமது ஞான குரவர் ஆணைப்படி திருத்தளிச்சேரியில் இருந்து தீட்சைகளும் சித்தாந்த சாத்திர உபதேசமும் செய்துவந்த சுப்பிரமணிய தேசிகர் தமது ஞான குரவரைத் தரிசிக்க விரும்பித் திருவாவடுதுறைக்கு வந்தார். துறைசைப் பதியிலேயே இருந்து குருதரிசனம் செய்து வருங்காலத்தில் அவர் ஓர் மாசி மாதத்து அவிட்ட நட்சத்திரத்திலே சிவபரிபூரணமடைந்தார்.

அதன் பின்பு, தம் அடியவர்களுட் சிறந்த அம்பலவாணத் தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் செய்து சின்னப்பட்டத்தில் அமர்த்தினர்.

ஸ்ரீ வேலாயுத முனிவர்:— இவர் இவ்வாதீனத்து அடியார் கூட்டத்துள் ஒருவர். ஆதீனத்திலுள்ள பெரியோர்களிடம் முறையாகப் பலநூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். ஆதீனத்திலே இவருக்கு ஏற்பட்ட மன வருத்தத்தால் இவர் திரிசிரபுரத்தில் மலைக்கோட்டையில் உள்ள மௌனசுவாமிகள் மடத்தில் சிலகாலம் வசித்துவந்தார். இவருக்கு ஆதீனத்தில் ஏற்பட்ட வருத்தம் உலகுக்கு நன்மையை

ஆதீன முனிவர்களும்

தமிழ்த்தொண்டும்

விளைவித்தது, திரிசிரபுரத்தில் இவர் இருந்தகாலத்திலே அங்குள்ளவர்களும் அயலூரிலுள்ளவர்களுமாகப் பலர் இவரிடத்திலே வந்து கல்வி பயின்று வந்தனர். இவ் வாதீனத்து மகாவித்துவான் — பிள்ளையவர்களும் தமது 15—16 ஆம் பிராயத்திலே இவரிடம் பல நூல்களைப் படித்துத் தேர்ந்தார். சில நூல்களைப் பெற்றுப் பிரதி செய்துகொண்டார். முன்பு படித்த நூல்களிலுள்ள ஐயங்கள் யாவும் இவராலே பிள்ளையவர்கட்கு நீங்கித் தெளிவுற்றன. அவர் தமிழ் நூல்களின் பரப்பையும் இவராலேயே அறிந்து கொண்டனர். வித்துவான் கோவிந்தபிள்ளை என்பவரும் இவரிடத்துக் கல்வி பயின்றவரே யாவர்.

ஸ்ரீ அம்பலவாண முனிவர்:—இவர் வடமொழி, தென்மொழி இரண்டினும் முறையான பயிற்சியுடையவர். பல சிவபுராணங்களிலும், பல பிரபந்தங்களிலும், சைவ சாஸ்திரங்களிலும் இவருக்கு நல்ல ஆராய்ச்சியுண்டு. சிறந்த ஒழுக்கமுடையவர். இடைவிடாமற் படித்தலிலேயே காலத்தைப் போக்குபவர். ஓரே அளவுள்ள சுவடிகளில் தமிழ் நூல்களை எழுதிவைத்துக் கொள்வதில் மிக விருப்பமுடையவர். இவரால் எழுதப்பெற்ற சுவடிகள் மிகப்பல. 96—பிராயத்துக்கு மேல் வாழ்ந்தவர். குரோதன — கார்த்திகை-மீ (கி. பி. 1845) வேளூர் — ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் சிவபரிபூரணமான பின் பிள்ளையவர்கட்குக் கம்பரந்தாதியைப் பாடஞ் சொன்னவர் இவரே. சூரியனார் கோவிலிலுள்ள ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் மடத்துத் தலைவராகப் பின்பு ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளால் இவர் நியமிக்கப் பெற்றனர்.

இவர் திருவிடைமருதூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே தோன்றியவர். துறவொழுக்க

முடையவர். ஞானாசிரியராகிய வேளூர் — ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடத்து மூவகைத் தீட்சையும் முறையே பெற்றுச் சைவ சந்நியாசமும் 'தாண்டவராயத் தம்பிரான்' என்னும் தீட்சா நாமமும் பெற்றவர். தமிழ் மொழியிலுள்ள இலக்கண—இலக்கியங்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் முறையாக இவ்வாதீனத்திலே

### வித்துவான்—தாண்டவராயத் தம்பிரான்

கற்றுத் தேர்ந்தவர். மேலும் மேலும் படிக்க வேண்டுமென்னும் ஊக்கமிக்கவர். சின்னப்பட்டத்திலுள்ள மேலகரம் — ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய வித்தியாகுரு இவரே. இவர் சென்னையில் கோவிந்தப்பநாயக்கன் தெருவிலுள்ள திருவாவடுதுறை மடத்திலிருந்து விளங்கினர். சென்னையில் அப்பொழுதுள்ள புலவர் பெருமக்களோடு அளவளாவித் தங்கல்வியை மேம்பாடுறச் செய்தார். இவருடைய பெரு விருப்பத்தாலேயே மேலகரம்—ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களைத் தெரிந்தெடுத்துத் தம் ஆதீன வித்துவானாகவும், மகா வித்துவானாகவும் ஆக்குவித்தார்.

தமது ஞான குரவராகிய வேளூர்—ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் திருவாவடுதுறையிலே குரோதி௵ கார்த்திகைமீ கார்த்திகை நட்சத்திரத்திலே (கி. பி. 1845) சிவபரிபூரண மடைந்த பின்பு பத்து நாட் குருபூசையும் சிறப்பாக நடத்தித் தாம் ஞானபீடத்தி

### 15. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

லெழுந்தருளி யிருந்து அடியார்களுக்குச் சிவஞானோபதேசம் செய்துவரலாயினர். ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் திருமந்திரம், மெய்கண்ட நூல்கள், பண்டார சாத்திரம், சித்த நூல்கள் இவைகளில் சிறந்த பயிற்சியுள்ளவர்கள்.

ஆதலின், தக்க பெரியோர்களை உடன் வைத்துக்கொண்டு இடைவிடாமல் எப்பொழுதும் நூல்களை ஆராய்ந்து சிந்தித்துக்கொண்டே யிருப்பார்கள். அவர்களிடத்து நேரே கல்விபயில விரும்புவோருக்கு அது தடையாக இருந்தது. அதனுல் கல்வி பயில விரும்புவோர் அடியார் கூட்டத்திலுள்ள தம்பிரான்களிடம் தங்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பாடங்கேட்டு வந்தனர். தம்பிரான் களில் பலர் கல்வி கேள்விகளால் சிறந்து விளங்கினர். ஆதீனத்திலிருந்து எப்போதும் அவர்கள் இலக்கிய இலக்கண நூல்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் முறையே பாடம் சொல்லிவந்தனர் என்ப. இவர்கள் காலத்திலேதான் திரிசிரபுரம்—ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆதீன வித்துவாஞக அமர்த்தப்பட்டார். பிள்ளையவர்கள் இவர்கள் மீது கலம்பகமும், பிள்ளைத் தமிழும் இயற்றியுள்ளார்கள் பின்பு மகாவித்துவான் என்று கௌரவிக்கவும் பெற்ருர்.

இவர்கள் சின்னப்பட்டத்து மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் கி. பி. 1867—பிரபவ ஆண்டுத் தொடக்கத்தில் திருவண்ணுமலைக்கு ஒரு யாத்திரை செய்தருளினுர்கள். இவர்கள் திருவாவடுதுறையிலே சுக்கில—ஆனிப்பூர நாளிலே சிவபரிபூரணம் அடைந்தருளினுர்கள்: பட்டத்திலிருந்த காலம் கி. பி. 1845—1868 வரையில்.

தமிழ்ப் பெருங்கவிஞராகிய மேலகரம்—திரிகூடராசப்பக் கவிராயர் பரம்பரையில் அவதரித்தவர். இயல்பிலேயே தமிழார்வ மிக்கவர். ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரானிடத்துப் பல தமிழ் நூல்களைப் பாடங்கேட்டுச் சிறந்தவர். வித்தியாகுருவைத் தெய்வமாகவே மதித்தவர். ஆதீன குலதெய்வமாகவுள்ள ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளைத் தமது வழிபடு கடவுளாகவே கொண்டு

**16. மேலகரம்— ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்** போற்றியவர். வித்துவான்களுடைய திறமையை நன்கு அறிந்து பாராட்டும் நுண்மாணுழைபுலமுடையவர். வடமொழிவாணர்களும், தமிழ்ப் பெரும்புலவர்களும் வாழத் தம் வாழ்நாளளவும் நன்கு வாழ்ந்தவர்கள். வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் முகமாகப்பிள்ளையவர்களை அறிந்து ஆதீனத்து வித்துவானாகவும், மகா வித்துவானாகவும் கௌரவித்துப் போற்றிப்பாதுகாத்துத் தமிழகத்துக்குப் பெரிதும் பயன்படச் செய்தவர். சங்கீத வித்துவான்களுக்கெனத் தனிமதிப்பு வைத்துச் சிறப்புக்கள் செய்தவர். உலகியல் நெறியிலும் அனுபவத்திலும் சிறந்தவர்களாகத் துறவரசென நல்லோர் மதித்துக் கொண்டாடுமாறு விளங்கியவர். 'நடையறுப் பெருந்துறவு' என அருளிய ஸ்ரீ சுவாமிகள் வாக்கு இவருக்குப் பொருந்தும். அரசியலாரும் மதிக்கும்படி ஆதீன காரியங்கள் இவர்கள் காலத்தில் விளக்கமுற்றன. அரசர்களும், பிரபுக்களும், பெரிய மனிதர்களும் அடிக்கடி வந்து தரிசனம் செய்து போற்றுவார்கள். சின்னப் பட்டத்திலுள்ள ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் காலத்திலே ஆதீனம் மிக உயர்ந்த நிலையை அடையும் என எதிர்பார்த்தவர்கள். உயர்ந்த இலக்கண இலக்கிய நூல்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் எப்பொழுதும் பாடஞ் சொல்லிக் கொண்டே இருந்தவர்கள். ஆதீன வித்துவான் ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானிடத்துக் கல்வி யறிவொழுக்கம் துறவு முதலிய நல்லியல்புகள் கண்டு அவரை அகலாமல் தம்பால் வைத்துக்கொண்டு போற்றியவர்கள். தம்பாலன்புடைய காசிவாசி—ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வேண்டுகோளின்படி ஆதீன வித்துவான் ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானைத் (கி. பி. 1880—1894) திருப்பனந்தாட் காசிமடத்து அதிபராகக் கொடுத்து

மகிழ்ச்சி யடைந்தவர்கள். சின்னப் பட்டத்திலுள்ள ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் (கி. பி. 1883) சித்திரபானு-ஷூ தை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்திலே கல்லிடைக் குறிச்சியிலே சிவபரிபூரணம் அடைந்தார். அப்பொழுது ஞானுசிரியர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு உண்டான பெரு வருத்தம் அளவிடக் கூடியதன்று. திருவருளையும் குருவருளையுமே சிந்தித்திருந்து தம் வருத்தத்தைப் போக்கினுர் என்ப. தமது அடியவர்களுட் சிறந்த ஆதின வித்துவான் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளைக் குன்றக்குடியிலுள்ள திருவண்ணுமலை ஆதீனத்துக்கு கி. பி. 1888-ல் தலைவராக அனுப்பினுர்கள். தணிகைப் புராணம், பெரிய புராணம், மெய்கண்ட நூல்கள், பண்டார சாத்திரம் முதலியவைகளை நன்ருகப் பாடஞ் சொல்லும் வன்மையுடையவர் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்.

### சின்னப்பட்டம்

### ஸ்ரீ நமச்சிவாய தேசிகர்

இவர் திருநெல்வேலிப் பேட்டையில் பரம் பரைச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டவர். பாடங் கேட்கும் நூலை முன்னதாகவே படித்துவைப்பதும், படித்தபின்பு நன்கு சிந்தனை பண்ணுவதும் இவருக்கு வழக்கம். சைவ சித்தாந்த நூல்களை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் முறையாகக் கற்றவர். சாஸ்திர நுட்பங்களை நன்கு உணர்ந்தவர். தமிழிலும், வடமொழியிலும் ஆழ்ந்த பயிற்சியுள்ளவர். மாணுக்கர்கட்குப் பாடம் சொல்வதையே பொழுதுபோக்காக உடையவர். சிறிதும் ஓய்வின்றிப் பாடஞ் சொல்லுபவர். பாடஞ் சொல்லும்போது சைவ சித்தாந்த சாஸ்திர விஷயங்கள் வந்தால் மேற் போக்காகச் சொல்லி அவர் விட்டுவிடுவார். சைவ சித்தாந்த

நூல்களைத் தனியே படிக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. லௌகிகத்திலும் திறமையுள்ளவர். ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் சின்னப்பட்டம் பெற்றகாலம் 1871: பிரமோதூத சித்திரைமீ ஆம் (கி. பி. 1871—1883).

## சின்னப்பட்டம்

## ஸ்ரீ அம்பலவாணதேசிகர்

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் தமது பரிவாரங்களுடன் (1885—மார்ச்சு) தாரண ஆண்டு மாசிமீ மகாமக தரிசனத்துக்குக் கும்பகோணம் பேட்டை மடத்திலே வந்து எழுந்தருளியிருந்தார்கள். அப்பொழுது சென்னையில் நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு மடத்திலுள்ள வித்துவான் — ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடம் படித்துவந்த ஒரு குட்டித் தம்பிரானையும் அழைத்துக் கொண்டு வந்து திருவண்ணாமலை ஆதீன மடத்துக் காரியஸ்தர்களில் முக்கியமானவர்கள் மகா சந்நிதானத்தைத் தரிசித்து வணங்கினார்கள். ஞான தேசிகருடைய திருக்கடைக்கணோக்கம் அக் குட்டித்தம்பிரான் பால் விழுந்தது. பின்பு, அவர் துழாவூரிலே பரம்பரைச் சைவ வேளாளர்குலத்திலே அபிஷிக்தர் மரபிலே தோன்றியவர் என்பதையும், வடுகநாத பண்டாரம் என்பவருடைய குமாரர் அருணாசலம் என்னும் அபிதானமுடையவர் என்பதையும் அறிந்துகொண்டார்கள். அதன் பின் நல்லநாளிலே தமதாதீனத்துக்கு அவரை அழைத்து வரச் செய்து சிறந்த ஆசிரியர்கள் முகமாகக் கல்வி பயிற்றுவித்தார்கள், மூவகைத் தீட்சையும் முறையே செய்து சிவஞானோபதேசமும் இவ்வாதீன முறைப்படி சைவ சந்நியாசமும் கொடுத்து அம்பலவாணர் என்ற தீட்சா நாமமும் செய்தருளினார்கள். ஸ்ரீ அம்பலவாணருடைய கம்பீரத்தையும், அழகையும், சௌலப்ய குணத்தையும் கண்டு மகிழ்வார்கள். இவர் பட்டத்துக்குத்

தக்கவரே என எண்ணி மனநிறைவுடையராயினர் ஞான தேசிகர். இவ்வாறாக, 7—1—1888ல் இவருக்கு ஆசாரியாபிடேகமும் செய்தருளி ஞான தேசிகர் அன்று மாலை நான்கு மணியளவிலே திருவாவடுதுறையிலே சிவபரிபூரண மாயினர்.

சர்வசித்து — தை — 13உ ஆசாரியாபிடேகம் செய்வதாக நன்னாள் பார்த்துப் பத்திரிகையும் வெளியிட்டுள்ளார்கள். ஞானாசிரியர் தம்முடைய திருமேனி நிலையின்மை குறித்து மார்கழி — 25உ சனிக்கிழமை சுவாதி நாளிலே பகல் பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கு ஆசாரியாபிடேகம் விரைந்து செய்தருளினார்கள்.

"திருவிசைநல்லூரிலிருந்த ஸ்ரீ மகாமகோபாத்தியாய இராமசுப்பா சாஸ்திரிகள் என்னும் பெரியார் 'விஷ்ணுதத்வரஹஸ்யம்' என்று வடமொழியில் ஒரு நூலெழுதி வெளியிட்டார், அதிலுள்ள பல விஷயங்கள் சிவபக்தர்களுடைய மனத்தைப் புண்படுத்தக்கூடியனவாக இருந்தன. அதைப் படித்துப் பார்த்த

**விஷ்ணுதத்வ ரஹஸ்ய கண்டனம்**

ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களுடைய தந்தையார் ஸ்ரீ வேங்கடராமையரவர்கள் மிகவும் வருத்தமடைந்தனர். அந்தப் புத்தகம் முழுவதிலும் சிவத் துவேஷமான வாக்கியங்கள் நிறைந்திருந்தன. உடனே அவர் அக்காலத்தில் இடையாற்றுமங்கலத்திலிருந்தவரும் நான்கு சாஸ்திரத்திற் பயிற்சியுடையவருமாகிய அப்பு சாஸ்திரிகள் என்பவரிடம் அந்த நூலுக்கு ஒரு கண்டனம் எழுதவேண்டுமென்று

கூறிப் பொருளுதவி செய்தார். அந்த வித்துவான் அங்ஙனமே 'விஷ்ணு தத்வ ரஹஸ்ய கண்டனம்' என்று ஒரு புத்தகம் எழுதினார். பின்பு அதனை நமது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் பெருந்தொகை (ரூ. 2000) உதவி செய்து பதிப்பிக்கச் செய்தார்கள். எல்லோருக்கும் அந்தப் புத்தகம் விலையின்றி அளிக்கப்பெற்றது. அப்பால் அந்தக் கண்டன நூலுக்குச் சமாதானம் ஒன்றும் வெளிவரவில்லை"

**சில பணிகள்**

செவந்திபுரம் தட்சிணம் பெரிய காறுபாறு வேணுவனலிங்கத் தம்பிரான் என்பவர் திருவாவடுதுறையிலே இப்பொழுதுள்ள கொலுமண்டபத்தை மிக வேலைப்பாட்டுடன் செய்வித்தனர்: ஈசுவர ஆண்டு தைத்திங்கள் (கி. பி. 1877). இவர், ஞானாசிரியர் தங்குவதற்காகச் செவந்திபுரம் மடாலயத்தைப் புதுக்கிச் சிறப்பாகப் பணி செய்வித்தார்: வெகுதானிய—ஆனிமீ அதில் ஞானாசிரியரை எழுந்தருளுவித்துச் சிறப்புக்களும் செய்தார். அக் கட்டிடத்துக்கு 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்பது பெயர். திருவாவடுதுறைக் கொலுமண்டபம் இவர் பெயரால் 'வேணுவனலிங்க விலாசம்' என வழங்குகிறது.

திருப்பனந்தாட் காசி மடத்துத் தலைவர் ஸ்ரீ காசிவாசி—இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஒடுக்கத்தின் பக்கத்திலே 'இராமலிங்க விலாசம்' என்னும் பெயரால் ஒரு கட்டிடம் சேர்த்தமைத்து ஞான தேசிகர் திருவருளைப் பெற்றார்.

மூன்றாவது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளிச்செய்த தசகாரியம்

**பண்டார சாத்திரங்கள் பதினான்கு**

முதலிய பத்தும், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர் அருளிச்செய்த தசகாரிய முதலிய இரண்டும், ஸ்ரீ சாமிநாத தேசிகர் அருளிச் செய்த தசகாரியம் ஒன்றும் பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர் அருளிச் செய்த பஞ்சாக்கரப் பஃறொடை ஒன்றும் ஆகப் பதினான்கு ஞானநூல்களும் பண்டார சாத்திரங்கள் என ஆன்றோரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இனி, வாதுளாகமப்படி ஞான பூசாவிதி மொழி பெயர்ப்பு, அநாதியட்டவணை, அனுபோக வெண்பா, வருண சிவாசாரியர் பத்ததிப்படி கிரியா பூசாவிதி மொழி பெயர்ப்பு முதலிய நூல்கள் இவ்வாதீனத்திலே அனுக் கிரகம் பெற்ற பெரியோர்களால் செய்தருளப் பெற் றுள்ளன.

**தருமபுரம் பரமசிவத் தம்பிரான்**

இவர் தருமபுரம் ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக மூர்த்திகளிடம் கல்லாடையும் தீட்சையும் பெற்றவர், நல்ல தமிழ்ப் பயிற்சியுள்ளவர். வடமொழியிலும் வல்லுநர். தமது ஞானாசிரியர் பால் அனுமதி பெற்றுப் பெரும்பாலும் திருவாவடுதுறையி லேயே இருந்து வந்தனர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடத் தில் மிக்க பக்தியுடையவர். அவரிடத்திலே சில தமிழ் நூல்களையும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும் பாடங் கேட்டு வந்தார். மடத்தைச் சார்ந்த வடமொழி வித்துவான்களிடத்தில் வியாகரண நூலையும் படித்து வந் தார். இவர் நன்றாகப் பிரசங்கம் செய்வார். தமிழிலே செய்யுள் இயற்றும் ஆற்றல் மிக்கவர். நுட்பமான அறிவுடையவர். மனத்தைக் கவரும் தோற்றப் பொலிவுடையவர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மீது ஒரு மும்மணிக் கோவை இயற்றியுள்ளார்.

**ஸ்ரீ பழனிக் குமாரத் தம்பிரான்**

களிலும், சிறந்த பயிற்சியுள்ளவர். இராமநாதபுரம் ஸ்ரீமான் — பாண்டித் துரைசாமித் தேவருக்குச் சித்தாந்த சைவ நூல்களைப் பாடஞ் சொன்னவர் : இவ்வாதீன வித்துவான்.

மேலகரம் — ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சித்தியார் சுபக்கத்துக்கு ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த பொழிப்புரையைத் தழுவிப் பதவுரை செய்தார்.

**பலவகைக் குறிப்புக்கள்**

1868 — விபவ.

அநந்தகிருஷ்ண கவிராயர் :— இவர் விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீ நமச்சிவாயக் கவிராயருடைய வழித்தோன்றல். சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரிடம் பல நூல்களைப் பாடங் கேட்டுத் தேர்ந்தவர், பின்பு பிள்ளையவர்களிடத்திலும் வந்திருந்து பாடங் கேட்டார். இவர் ஆதீனத்துச் சீடராகலின் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் தீட்சை பெற்றுக்கொண்டு 'அம்பலவாணர்' என்னும் தீட்சா நாமமும் பெற்றார். அப்பொழுது பிள்ளையவர்கள் இவரைப் பாராட்டி ஒரு பாடல் செய்திருக்கின்றனர்.

சண்பகக் குற்றலக் கவிராயர் :—இவர் மேலகரம்—திரிகூட ராசப்பக் கவிராயர் என்னும் புலவர் திலகருடைய பரம்பரையினர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளுடைய பூர்வாசிரமத்துத் தம்பியாவார். பிள்ளையவர்களிடத்து மகாமகோபாத்தியாய ஐயரவர்களுடன் கல்வி பயின்ற ஒருசாலை மாணவர். பிள்ளையவர்கள் பூதவுடல் நீங்கிய பின்பும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடத்துக் கல்வி பயின்றார்.

சிலேடைப்புலி பிச்சுவையர் :— சின்னப்பட்டம் ஸ்ரீ நமச்சிவாய தேசிகரிடத்துக் கல்வி பயின்றவர். யாவரும் வியக்குமாறு மிக விரைவில் கவிபாடும் ஆற்றலுடையவர். ஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்களால் மிகவும் ஆதரிக்கப் பெற்றவர். வேம்பத்தூரார் இவர்.

இராயசம் பொன்னுசாமிச் செட்டியார் :— திருவாவடுதுறையிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே தோன்றியவர். இவர் தந்தையார் முத்துச் செட்டியார் என்பவர். மேலகரம்—செண்பகக் குற்றாலக் கவிராயரிடத்திலே இலக்கிய, இலக்கண நூல்களை முறையே கற்றுத் தேர்ந்தவர். மிகவும் விநயமுடையவர். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயின்று இன்புறுவார். செய்யுள் இயற்றும் ஆற்றல் இவருக்கு மிகுதியாக உண்டு. வருபவர்களிடத்திலே எப்படிப் பழகவேண்டுமோ அப்படிப் பழகித் தமக்கும் ஆதீனத்துக்கும் நல்ல புகழை உண்டாக்குவார். இவரிடத்தில் எஜமான விசுவாசமும், குருபக்தியும் சிறந்திருந்தன. ஸ்ரீமத் ஐயரவர்கள் திருவாவடுதுறையிலிருந்த காலத்திலே அவர்களிடமும் பாடங் கேட்டு வந்தனர். இவர் துறைசைச் சிலேடை வெண்பா, துறைசை வேலவர் இங்கிதமாலை என்னும் நூல்களை இயற்றியுள்ளார். இவரியற்றிய தனிப் பாடல்களும் பல.

சேற்றூர்க் கந்தசாமிக் கவிராயர்:—இவர் சேற்றூர் சமஸ்தான வித்துவான்களின் பரம்பரையினர். சுப்பிரமணிய தேசிகருடன் பாடங் கேட்டவர். விரைவாகச் செய்யுள் செய்பவர். பாடஞ் சொல்லும் ஆற்றலும் மிக்கவர்.

சிதம்பர முதலியார் :—சென்னை ஐயாப்பிள்ளை தெருவில் இருந்தவர். ஸ்ரீ கச்சியப்ப முனிவரரைக் கொண்டு விநாயக புராணத்தை இயற்றுவித்து ரூ. 2000 சம்மானம் செய்து குளத்தூரில் அம் முனிவருக்கு ஒரு மடமும் கட்டிக்கொடுத்தவர்.

கி. பி. 1864 இரத்தாட்சி வைகாசி 2௨ காறு பாறு கண்ணப்பத் தம்பிரானுக்கும், பிள்ளையவர்களுக்கும் நிர்வாண தீட்சை நடந்தேறியது.

சிவதாணுத் தம்பிரான் :— திருவிடைமருதூர் கோயிற் கட்டளை விசாரணை செய்துவந்தவர், 1870 — பிரமோதூத ஆண்டில் இவர் முன்னிலையில் திருவிடைமருதூர் உலா அரங்கேற்றப்பட்டது.

சுப்பு ஓதுவார் :—தமிழ் இலக்கியப் பயிற்சியுடையவர். இவ்வாதீன ஓதுவார்களுள் ஒருவர். மதுரை இராமசாமிப் பிள்ளை ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் முன்பு அடங்கன் முறையைப் பரிசோதித்த பொழுது முழுவதையும் பண்ணோடு படித்துக் காட்டியவர்.

மாயூரநாதர் கோயிற் கட்டளை ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் விருப்பப்படி பிள்ளையவர்களால் மாயூரப் புராணம் இயற்றப்பட்டது.

திருவிடைமருதூர்க் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் விருப்பின்படி 'காசிரகசியம்' பிள்ளையவர்களால் பாடப்பட்டது. பலமுறை காசியாத்திரை செய்தவர் இவர்.

பாலசுப்பிரமணியத் தம்பிரான் :— இவர் இவ்வாதீனத்தைச் சார்ந்த மாயூரம் கட்டளை மடத்தில் கட்டளை விசாரணை பார்த்து வந்தவர். தமிழிலே நல்ல பயிற்சி உள்ளவர். 1871-ல் பிள்ளையவர்கள் மாயூரத்திலிருந்த போது இவர் பெரிய புராணம் அவரிடத்திலே பாடங் கேட்டார். மற்றுஞ் சிலரும் இவருடன் பாடங் கேட்டு வந்தனர்.

கனகச்சபைத் தம்பிரான் சுவாமிகள் :— திருவாவடுதுறை யாதீனத்துப் பெரிய காறுபாருகவும், வித்துவாளுகவும் இருந்தவர். இவர் விருப்பத்தின்படி மண்ணிப் படிக்கரைப்புராணம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு 1864-ல் அரங்கேற்றப்பெற்றது.

புலிக்குட்டி — ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீ பன்னிருகைத்தம்பிரான் சுவாமிகள், பெரிய பூசை ஸ்ரீ சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீ விசுவலிங்கத்தம்பிரான் சுவாமிகள் முதலியோர் இவ்வாதீன அடியார் கூட்டத்துச் சிறந்த வித்துவான்கள்.

திருப்பெருந்துறைக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் தம்முடைய சம்பளத்திலிருந்து இரண்டாயிரம் ரூபா சம்மானம் செய்து பிள்ளையவர்களைக்கொண்டு திருப்பெருந்துறைப் புராணத்தைச் செய்வித்தார். பிறரைக்கொண்டும் உதவிகள் கிடைக்கச் செய்தார்.

**ஸ்ரீ சங்கரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் இலக்கண இலக்கியங்களிலும், சைவசித்தாந்த நூற் பயிற்சியிலும் மிக்க புலமை வாய்ந்து ஆதீன சம்பிரதாயங்களை நன்குணர்ந்து விரிவுரை செய்யும் ஆற்றல்மிக்கு இவ்வாதீன வித்துவாளுக விளங்குபவர்கள்.**

**ஆதீன வடமொழி வித்துவான்கள்**

இவ்வாதீன வித்துவான்களாகச் சிறந்திருந்தோர் திருக்கோடிகா—கோதண்டராம சாஸ்திரிகள், இராமகுட்டி சாஸ்திரிகள், திருவாலங்காட்டு—விசுவபதி தீட்சிதர், அப்பா தீட்சிதர், அப்பைய தீட்சிதர், தியாகராச சாஸ்திரிகள் முதலியோர்.

இராமதுட்டி சாஸ்திரிகள் :— இவர் ஊர் திருக்கோடிகா. வடமொழி வியாகரணத்திலும், அலங்கார நூலிலும் வல்லவர். தம்பிரான்களுக்கு சம்ஸ்கிருத பாடம் சொன்னவர். தெலுங்கப் பிராமணர்.

அப்பா தீட்சிதர்:— திருவாலங்காட்டில் உள்ளவர். ஸ்ரீ அப்பைய தீட்சிதர் பரம்பரையினர். வியாகரணத்திலும், சைவ சாஸ்திரங்களிலும் நல்லபயிற்சியுடையவர். இவரிடத்தில் எத்தனையோ மாணவர்கள் மடத்து உதவியால் படித்துப் பெரிய வித்துவான்களாயினர்.

தியாகராசச் சாஸ்திரிகள்:— இவரும் ஸ்ரீ அப்பைய தீட்சிதர் பரம்பரையினரே. சில சாஸ்திரங்களிலும் வேதத்திலும் வல்லவர். அலங்கார சாஸ்திரத்தில் நிபுணர். சங்கீதத்திலும் சாஹித்தியம் செய்தலிலும் நல்ல ஆற்றலுடையவர். வீணை வாசிப்பதில் அதிகத் தேர்ச்சி பெற்றவர். இங்கிலீஷ் முதலிய வேறு பாஷைகளிலும் இவருக்குப் பயிற்சியுண்டு. ஒவ்வொரு பாஷையிலும் செய்யுள் செய்யும் ஆற்றல் உள்ளவர். இவர் உபந்யாசம் செய்வது சுவையுடையதா யிருக்கும். சிவ கதை பண்ணுகிற வழக்கமும் இவருக்குண்டு. சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே கேட்பவர்கள் வேறுவிஷயத்தில் மனத்தைச்செலுத்தாமல் ஆனந்தித்துக் கொண்டே யிருக்கும்படி செய்வார். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சின்னப்பட்டம் பெற்றது தொடங்கி சம்ஸ்கிருத பாடம் சொல்லிவந்த தன்றிப் பல சாஸ்திரங்களுடைய நுட்பங்களையும் பல வடமொழிக்காவியங்களின் நுட்பங்களையும் அலங்காரப் பகுதிகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஓய்வு நேரங்களில் தெரிவித்து அவரை உலகத்திற்கு மிகப்பயன்படும்படி செய்தவர். இவருடைய குரு அப்பா தீட்சிதர்.

தமது ஞானாசிரியராகிய மேலகரம்—ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் சிவபரிபூரணமான பின்பு பத்துநாட் குரு பூசையும் சிறப்புற இயற்றித் தாம் ஞான பீடத்தமர்ந்தருளுவாராயினர். ஸ்ரீ அம்பலவாண தேசிகர் தமிழ்ப் பயிற்சி மிகுதியாக உடையவர். வடமொழியிலும் வல்லவர். சிறந்த நூல்களுக்கு வடமொழியிலே இவர் வழங்கியுள்ள சிறப்புப் பாயிரங்களால் அது இனிது புலப்படும். கல்லிடைக்குறிச்சி வித்துவான்—முத்து சாஸ்திரிகளிடம் வடமொழி பயின்றார். மகா வித்துவான் — பிள்ளையவர்களுக்குப் பின்பு இவ்வாதீன வித்துவ சிரோமணியாக இருந்த ஸ்ரீ சபாபதி நாவலர், தியாகராச செட்டியார் முதலியோரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். ஞான தேசிகராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளிடம் சித்தாந்த சைவ சாஸ்திரங்களையும், திருமந்திரம், தேவார திருவாசக முதலிய அருட்பாக்களையும் நன்கு கற்றுத் தெளிந்தார். திருமுறைகளில் இவருடைய நுண்ணறிவு நன்றாகச் சென்று திளைத்துத் தேக்கிட்டமையின் பலவகையான குறிப்புகள் எழுதிச் சேகரித்தார். ஆதீனத்துப் புத்தகசாலையில் உள்ள ஏட்டுச் சுவடிகளில் பலவற்றைத் தமது திருக்கரத்தால் காகிதங்களில் பிரதி செய்து உயர்ந்த பட்டுக் கட்டிடங்களால் அழகுபடுத்திப் பொன் முலாம் பூசிப் பாதுகாத்துள்ளார்கள். இசைப் பயிற்சியிலும் இணையற்றவர்கள். சங்கீத சம்பந்தமான சில குறிப்புக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். இயல், இசை, நாடகம் ஆகிய முத்திறத்திலும் மூதறிவுடையவர்கள் என்பது மிகையன்று. ஆதீன குல தெய்வமாக விளங்கும் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் தமது திருக்கரமலரால் எழுதியுள்ள சிவஞான போத திராவிட மாபாடியத்தை மூன்று முறை பெயர்த்துக் காகிதப்

## 17. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்